இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12120)

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி-01 | 15-06-2005 | புதன்கிழமை | ஓசை 117

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி கொழும்பில் நடத்திய கண்டனப் பேரணி

## எதிர்பார்த்த அளவில் மக்கள் திரளவில்லை அரசியல் அவதானிகள் மதிப்பீடு

**உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நேற்று பேரணி ஒன்றை நடத்தியது. சுமார் ஒரு இலட்சம் பேர் வரையில் மக்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட இப்பேரணியில் குறைந்த அளவிலேயே மக்கள் திரண்டதாக அரசியல் அவதானிகள் மதிப்பிட் டுள்ளனர்.**

பொறளை கம்பல் மைதானத்தில் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் பேரணி தொடங்கியது. மருதானைச் சந்தி, வீன்ஸ் வீதி ஊடாக கொழும்பு லிப்டன் சுற்றுவட்டம் வரை பேரணி வந்து அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பின்னர் பொதுக்கூட்டம் அங்கு நடைபெற்றது.

சுமார் பத்தாயிரம் பேரளவில் இப்பேரணியில் கலந்துகொண்டுள்ளனர்." பொதுக்கட்டமைப்பு யோசனையைக் கைவிடு" எனும் கோரிக்கையை முன்வைத்து இந்தப் பேரணி நடத்தப்பட்டது.பௌத்த பிக்குமார் நடத்திய பேரணிகள் வன்முறைகளில் முடிந்த நிலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்களை நோர்வே ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பேராசிரியர் ஹாசன் சிமித் அவர்கள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். தமிழீழக் காவல்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் காவல்துறையினரின் செயற்பாடுகள் குறித்து பா. நடேசன் அவர்கள் விளக்கிக் கூறினார்.



## பொதுக்கட்டமைப்பை விலக்கிக்கொள்ளாவிட்டால் அரசிலிருந்து விலகும் முடிவில் மாற்றமில்லை!

### ஜே.வி.பி யின் பிரசார செயலர் மீண்டும் வலியுறுத்து

பொதுக்கட்டமைப்பு யோசனை விலக்கிக்கொள்ளப்படாவிட்டால் இன்று நள்ளிரவு 12 மணியுடன் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளும். அறிவிப்பில் மாற்றம் இல்லையென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நேற்றுக் கொழும்பு கெம்பல் பூங்காவில் இருந்து பேரணியாகப் புறப்பட்ட ஜே.வி.பி யினர் லிப்டன் சுற்று வட்டத்தில் எதிர்ப்புக்கூட்டத்தையும் நடத்தினர்.இதன்போது உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலர் ரில்வின் சில்வா பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதன் காரணமாக நாடு பிளவுபடும் என எச்சரித்தார்.

ஜே.வி.பியை பொறுத்த வரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இறுதி முன்னணியாக இருக்கப்போவதில்லை. சனாதிபதியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை விரைவில் செயற்படுத்துக அரசுக்கு உதவி வழங்கும் நாடுகள் அறிவுறுத்து

### வோஷிங்டன் மாநாட்டில் தீர்மானம்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் விரைவில் கைச்சாத்திடுமாறு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் அமைப்பின் இணைத்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டம் ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகிய நாடுகளின் விசேட பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டோக்கியோ உதவிவழங்கும் விசேட அமைப்பின் இணைத் தலைவர்களின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஐ.தே.கட்சி ஈடுபடமாட்டாது

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து

அரசாங்கத்தை அதிகாரத்தில் இருந்து விலக்குவதற்கு முயற்சிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக எச்சரித்துள்ளது.இது அந்தக் கட்சியின் அரசியல் அணுகுமுறையாகும்.அதனை விமர்சிக்க மூன்றாவது கட்சியான தமக்கு அவசியமில்லை. இந்த நிலையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகி அதன் மூலம் அரசாங்கம் கவிழும் நிலைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பைக் கைவிட 80 தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு யோசனையைக் கைவிடுமாறு வலியுறுத்தி இன்று 80 தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றன.

மின்சக்தி அரச அச்சக,துறைமுக, தொடருந்து,சுகாதார எண்ணெய்க் கூட்டுத்தாபன, கல்வி உட்பட 80 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கின்றனர். 80 தொழிற் சங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டிற்கமைய இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன. அரச அச்சகம் மின்சாரசபை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் துப்பாக்கி தாக்குதல் கடற்படைச் சிப்பாய் படுகாயம்!

தலைமன்னார் சிறிலங்கா கடற்படை முகாம் வீதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்றுக்காலை எட்டு மணியளவில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் பேரவையுடனான சந்திப்பு சனாதிபதியால் இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு

### கொழும்பின் பதற்ற சூழலே காரணமாம்

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையினரை நேற்று சந்திக்கவிருந்த சனாதிபதி சந்திரிகா, பின்னர் ஜே.வி.பி.யின் ஆர்ப்பாட்டம் காரணமாக அதனைப் பின்போட்டுள்ளார். நேற்று மாலை மூன்று மணியளவில் சனாதிபதி மாளிகையில் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினரைச் சந்திப்பதற்கு சனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து, தமிழ் மக்கள் பேரவையினர் திருகோணமலையிலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், கொழும்பில் நேற்று ஜே.வி.பியினர் நடாத்திய பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கண்டனப் பேரணி காரணமாகக் காணப்பட்ட பதற்ற சூழ்நிலையையடுத்து இந்தச் சந்திப்பை ஒத்திவைப்பதாக சனாதிபதி சந்திரிகா திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக தமிழ் மக்கள் பேரவையினருக்கு அறியத்தந்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்து

(12 ஆம் பக்கம் பார்க்ச

## வரி விளம்பரம்

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனை செய்த "இது இந்துமதம்" நூலின் ஆசிரியர் "சாமிஜி" எழுதிய புதிய புத்தகம் "கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்" விலை ரூபா 80/=

பரணன் 138 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.தொலைபேசி-2222365

(5381)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை மல்லாவி வீதி, வன்னிவிளான் குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5"x6"x12"- ரூபா.23.00

4"x6"x14"- ரூபா .20.00

(6211)

### விற்பனையாகின்றது

கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி 2006 இற்கான விண்ணப் படிவம், O/L விண்ணப்படிவம் என்பன குயிலன் புத்தகசாலையில் விற்பனையாகின்றது. (சி.12251)

### தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை முகமாலைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைத்தோ அல்லது கீழ்க்காணும் முகவரிக்கோ அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:- நவரத்தினம் அரியமலர்,
சங்குவேலி, அம்மன்கோவிலடி,
மானிப்பாய் தெற்கு.

(சி.12050)

### இடமாற்றம்

முல்லை வீதியில் அமைந் திருந்த யாழ்.வேந்தன் (Mithu) தையலகம் தற்போது புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரி வீதியில் அமைந்திருக்கின்றது. என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தரு கின்றோம்.

(6171)

### காணி விற்பனைக்கு

விசுவமடு நாச்சிக்குடாவில் தென்னைமரங்களுடன் இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- வான்அலை, கண்டிவீதி, கிளிநொச்சி, அல்லது சீக்கண்ணன் சுத்திகரிப்பு நிலையம், விசுவமடு. (6269)

### சிங்கள மொழி வகுப்பு

ஆரம்பம்: 16.06.2005 (வியாழக்கிழமை) பி.ப 5.00 மணி. வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் தினங்களில் 5.00-6.00 மணி வரை நடைபெறும். வேலை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். நிலவு கணனித் தொழில்நுட்பம். கக்சேரி அருகாமை, கிளிநொச்சி.

(6268)

### Digital Photo Album உருவாக்குபவர்களுக்கு

எம்மிடம் மேற்படி வேலைக்கான **Frame**, சீனறீஸ், முன்பக்கம் ஆகியன **Photoshop File** ஆக உள்ளன. தொடர்புகளுக்கு நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (சி.12207)

## கேள்வி அறிவித்தல்

**பெறுமதிசேர் வரியின் (விஏரி) பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பெற்ற சங்கங்களிடமிருந்து கீழ்க்காணும் வேலைக்கான கேள்வி கிளி. மாவட்டச் செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ICTAD இல் பதிவு செய்யப்பெற்றிருத்தல் அவசியம்)**

**1. நேட் அமைப்பினால் அறிவியல் நகரில் நிர்மாணிக்கப்பெறும் 05 வீடுகளைச் சீர் செய்தல்.**

**கேள்விப் பத்திரங்கள் 2005.06.28 ஆம் நாள் பகல் 12.00 மணிவரை எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர முடிவுநாள் 2005.06.29 ஆம் நாள் காலை 10.00 மணிவரை.**

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்/கிளி.மாவட்ட செயலக கேள்விச்சபைத் தலைவர் ,**
**கிளிநொச்சி மாவட்டம்.** (சி.12206)

## அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்தில் "வர்த்தக கைத் தொழில் விவசாயச் சம்மேளனம்" (Chamber of Commerce Industry and Agriculture) தொடங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சம்மேளனத்தில் உறுப்பினர்களை இணைத் துக் கொள்வதற்கான ஒன்றுகூடல் 2005.06.16 ஆம் நாள் காலை 9 மணிக்கு நிதித்துறை வணிக ஒன்றியப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. உறுப்பினராக இணைந்து கொள்ள விரும்புவர்களை, ஆர்வமுடைய வர்களை இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ள வருமாறு அழைக்கின்றோம்.**

**ஒழுங்கமைப்புக் குழு**
**வர்த்தக தொழில் விவசாயச்சம்மேளனம்**
**கிளிநொச்சி மாவட்டம்.** (சி.12209)

# சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தக்கோரி முல்லை. அரசசெயலகம் முன் மறியல்போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய மூன்று கிராமமக்களும் தம்மைத்தமது சொந்த இடங்களில் குடியமர்த் துமாறுகோரி மறியல்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் செயலகத்தை செயலிழக்கச்செய்து மூன்று கிராமங்களிலிருந்தும் பெருமளவான மக்கள் இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் அரசஅதிபரிடம் மகஜர் ஒன்றையும் வழங்கியுள்ளார்கள்.

மகஜரினைப்பெற்றுக்கொண்ட அரச அதிபர் இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி வெகுவிரைவில் அதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளார். (20)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் நேற்று இரத்ததானம் வழங்கினர்

(அலுவலக செய்தியாளர்)



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கிக்கென தமிழர் புனர் வாழ்வுக்கழக ஊழியர்களினால் நேற்று இரத்ததானம் வழங்கப்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியக ஊழியர்கள் பலர் தாமாக முன்வந்து நேற்று நண்பகல் வைத்தியசாலை இரத்தவங்கிக்கென இரத்ததானம் வழங்கினர்.

மேலும் பலர் இரத்ததானம் செய்வதற்கென தங்களது பெயர்களையும் பதிவு செய்து கொண்டனர். நேற்று சர்வதேச இரத்ததானம் செய்வோர் தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் சமகால அரசியல் கருத் தரங்கு நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வானது இப்பகுதிக் கிராமசேவையாளர் வரதன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை முள்ளியவளை பிரதேசப் பொறுப் பாளர் முல்லைவீரன், வன்னிப்பாராளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப்பொறுப்பாளர் ஈழவன், முல்லை மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் குமரன், முள்ளிய வளைக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைப்பொருளாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்புரையை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப் பாளர் முரளி ஆற்றினார். இறுதியாக வீடு வீடாகச்சென்று கிராம தரிசிப்பும் இடம்பெற்றது. (08)

# வயோதிபரின் சடலத்தை பொறுப்பேற்கவும்

(அலுவலக செய்தியாளர்)

வயோதிபர் ஒருவரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு கிளிநொச்சி வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பெரியகட்டை, மன்னாரைச் சேர்ந்த வேலு (வயது-66) என்பவர் கடந்த 13 ஆம் திகதியன்று கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக் கென அனுமதிக்கப்பட்டு நேற்றையதினம் வைத்தியசாலையில் மரணமாகியுள்ளார். வைத்தியசாலைக் குறிப்பேட்டில் அவரது மனைவியின் பெயர் இலட்சுமி எனக் குறிப்பிடப்பட்டு ள்ளது. எனவே இவ் வயோதி பரின் உறவினர்கள் கிளி. மாவட்ட வைத்தியசாலையினருடன் தொடர்பு கொண்டு. சடலத்தைப் பொறுப் பேற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.(சோ)

# உதவிகளை பெறாதோர் தொடர்பு கொள்ளவும்

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களில் இதுவரை அரச அதிபரினால் வழங்கப்படும் பொருட்களையும், பணத்தையும் பெறாதவர்கள் 30 ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் செயலக புனர்வாழ்வுக் கிளைப்பணிப்பாளர் குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்பொருட்களாக சமையல் பாத்திரங்களுக்கான 2500 ரூபா, இறந் தவர்களுக்காக முதற்கட்டமாக வழங்கப்படும் ரூபா 15 ஆயிரத்தினையும் பெறுமாறும், 30 ஆம் திகதிக்குப்பின்னர் வருவோர் இக் கொடுப்பனவு களைப் பெறமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (20)

# மல்லாவி காவல்பணிமனையினால் சட்டஒழுங்கு பேணல்நடவடிக்கைகள்

மல்லாவிப் நகர் பகுதியில் துணுக்காய் காவல்துறை பணிமனையினரால் இரவு நேர சட்டஒழுங்கு பேணல் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் பொறுப்பாளர் வதனகுமார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரவு நேரத்தில் வெளிச்சமின்றி வரும் வாகனங்களிற்கும் பக்கச் சமிக்ஞை இல்லா மல் உந்துருளிகளில் செல்வோர் மீதும் சட்ட நடவடிக்கையினை எடுத்து வருகின்றனர். மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் வீதிக்கு இடையூறாக வாகனங்களை இடைநிறுத்தும் வாகன சாரதிகளுக்கும் குற்றப்பணம் அறவிட்டும் வருகின்றனர். (24)

### சீனத் தூதரகத்தில் ஒப்படைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் போக்குவரத் துக்கு பாதகம் எற்படுத்துவதாகக் குற்றம் சுமத்தி பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஆறு சீன நாட்டவர் களை கொழும்பிலுள்ள சீன தூதரகத்தில் ஒப்படைக்க ஏற்பாடு கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை முதல் அவர்கள ஆறு பேரும் தம்மை விடு விக்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து அவர்கள் கொழும்பில் உள்ள சீன தூதர கத்தில் ஒப்ப டைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (32)

### பொதுக்கூட்ட அழைப்பு

(பூநகரி)

பூநகரி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாகத் தெரிவும், பொதுக்கூட்டமும் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்த குமார் தலைமையில் நடைபெறுமென செயலாளர் இரா.செல்வராசா அறிவித்துள்ளார். (34)

### நிர்வாகக்குழுத்தெரிவு

(திருமுருகண்டி)

திருமுருகண்டி வர்த்தக சங்க நிர்வாக குழுத்தெரிவு அண்மையில் முறிகண்டி வர்த்தக சங்க மண்டபத்தில் அப்பகுதி வலய பொறுப்பாளர் வி.சுடர்விழியன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கருத்துறையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஈழவேந்தன் ஆற்றினார். தலைவராக ஜீவானந்தம் செயலாளராக வே.நாகராசா பொருளாளராக ச. சிவசுந்தராஜ் இவர்களுடன் எட்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பாலியல் வழக்கில் ஜாக்சன் விடுதலை;
# 12 நீதிபதிகள் குழு பரபரப்பு தீர்ப்பு

(லண்டன்)

**பொப்பிசையுலகின் முடிசூடா மன்னனாகத் திகழும் அமெரிக்கப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் 13 வயதுச் சிறுவனுடன் பாலியல் உறவு கொண்டதாகவும், அந்தச் சிறுவனுக்கு மது கொடுத்ததாகவும் புகார் கூறப்பட்ட வழக்கிலிருந்து விடுதலையாகியுள்ளார்.**

இது தொடர்பாக கலிபோர்னியாவில் உள்ள சாந்தா மரியா நீதிமன்றில் கடந்த 2003 ஆம் ஆண்டு வழக்குத்தொடரப்பட்டது. இந்த வழக்கில் மைக்கேல் ஜாக்சன் கைதாகிப் பிணையில் விடுதலையானார்.

ஜாக்சன் மீது பத்துக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.இந்த வழக்கில் மைக்கேல் ஜாக்சன் மீது புகார் கூறிய சிறுவன் ஆர்விகோ அவனது தாய் உட்பட 140 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஜாக்சனுக்கு ஆதரவாக முன்னாள் நடிகை எலிசபெத் டெய்லரும் ஏறிச் சாட்சியம் அளித்தார். மொத்தம் 600 ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டன.

வக்கீல்கள் வாதம் முடிந்து தீர்ப்பு வழங்குவது தொடர்பாக 12 நீதிபதிகள் குழு கடந்த ஏழு நாட்களாகத் தீவிர ஆலோசனை நடத்தியது. ஜாக்சன் மீது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும் என்பதால் இந்த வழக்கின் தீர்ப்பு பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டது.

எட்டுப்பெண்கள், நான்கு ஆண்களடங்கிய நீதிபதிகள் குழு பரபரப்பான இந்த வழக்கில் நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கினார்கள்.

ஜாக்சன் மீதான குற்றச்சாட்டுக்களை நீதிபதிகள் குழு நிராகரித்தது. அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் மைக்கேல் ஜாக்சனை விடுதலை செய்து நீதிமன்று தீர்ப்பு வழங்கியது.



தீர்ப்பைக் கேட்க ஜாக்சனும் நீதிமன்று வந்திருந்தார்.தீர்ப்பைக்கேட்டதும் ஜாக்சன் வெளியே வந்து கூடி நின்ற ஆயிரக்கணக்கான ரசிகர்களைப் பார்த்து மகிழ்ச்சியில் கைகளை அசைத்தார். முத்தங்களையும் அவர் பறக்க விட்டார்.

பணம் பறிக்கும் ஆசையில் சிறுவனின் தாய் நடத்திய நாடகத்தின் ஒரு பகுதியே ஜாக்சன் மீதான குற்றச்சாட்டுக்கள் என்று அவரது வக்கீல்கள் கூறியவாதங்களை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர்.



குடும்பத்தினராலும், பாதுகாப்பு வழங்கும் வழக்கறிஞர்களாலும் சூழப்பட்ட நிலையில் சாந்தா மரியா நீதிமன்றத்திலிருந்து வெளியேறும் பொப்பாடகர் மைக்கேல் ஜாக்சன்.

## வாகன தொடரணி மீது தாக்குதல் ஆப்கானில் 5 அமெரிக்கப் படை பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தினரின் வாகன தொடரணி மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதன்போது நான்கு இராணுவத்தினரே காயமடைந்ததாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தபோதும் இறந்த ஐந்து இராணுவத்தினரின் உடல்களை உலங்குவானூர்தி மூலம் அகற்றியதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



பாக்தாத்தில் அமெரிக்க இராணுவத்தின் மூன்றாவது தரைப் படை தளத்தில் நடைபெறும் இராணுவப் பயிற்சி நிகழ்வுக்கு பாதுகாப்பு வழங்கும் ஈராக்கிய படைவீரர். உயரதிகாரி ஒருவரின் உத்தரவை தனது வானொலிக் கருவி மூலம் அவ தானிப்பதை காணலாம்.

# 50 ஆயிரம் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க மலேசியாவை கோருகிறது ஐக்கிய நாடுகள் சபை

(கோலாலம்பூர்)

"தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தவித்துக் கொண்டிருக்கும் மலேசியா 50 ஆயிரம் அகதிகளுக்கு சட்டபூர்வமாக வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்." என்று ஐ.நா. அகதிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

"வேலைக்கு ஆட்கள் தேவை" என்ற விளம்பரப் பலகை மலேசியாவில் கட்டுமானபணியிடங்கள், விவசாயப் பண்ணைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் வாசல்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் மலேசியாவிலிருந்து ஒரு இலட்சம் அகதிகள் வெளியேற்றப்பட்டனர். இது குறித்து அகதிகளுக்கான ஐ.நா. பிரதிநிதி வோல்கர் டர்க் தெரிவிக்கையில்; மலேசியாவில் தற்போது தொழிலாளர்கள் பற்றாக்குறையுள்ளது.சமீபத்தில் மலேசியாவிலிருந்து ஒரு இலட்சம் அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அண்டை நாடுகளான இந்தோனேஷியா, மியான்மாரைச் சேர்ந்தவர்கள் தற்போது மலேசியாவில் 50 ஆயிரம் பேர் தங்களை அகதிகளாகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில், 20 ஆயிரம் பேர் இந்தோனேஷியாவின் ஆஷ பகுதியைச் சேர்ந்தவர்கள், பத்தாயிரம் பேர் மியான்மாரைச் சேர்ந்த 'ரோகிங்யா' என்ற சிறுபான்மை முஸ்லிம்கள்.

இவர்களைச் சட்டபூர்வமாக பணிகளில் அமர்த்த மலேசிய அரசு முன்வர வேண்டும். ஆண்டுதோறும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினம் அனுசரிக்கப்படும். உலக அகதிகள் தின பரிசாக மலேசிய அரசு அங்குள்ள அகதிகள் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு வோல்கர்டர்க் கூறினார்.

# சிலியில் நிலநடுக்கம் எட்டுப்பேர் உடல் நசுங்கிப் பலி



தென்அமெரிக்க நாடான சிலியின் வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் எட்டுப் பேர் உடல்நசுங்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.9 புள்ளிகளாகப் பதிவானது. மலைப்பகுதிகளான அரிக்கா, ஆன்டாபாகஸ்டா உட்பட பல்வேறு பகுதிகளில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் பலவீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

நிலநடுக்கம் ஏற்பட்டபகுதிகள் பெரும்பாலும் மலைப்பகுதி என்பதால் உயிரிழப்பு அதிகளவில் ஏற்படவில்லை.சுனாமிப் பேரலைகளும் எழவில்லை. ஆனாலும் இதில் எட்டுப் பேர் பலியானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இகுனிக் பகுதியில் நிலநடுக்கத்தால் மலை உச்சியில் இருந்து பாறைகள் உருண்டு மலைப் பாதையில் சுற்றுலா சென்றுகொண்டிருந்த கார்மீது விழுந்தது.

இதில் அந்தக் கார் நசுங்கியது. காரில் இருந்தவர்கள் ஐந்து பேர் பலியானார்கள். நிலச்சரிவு ஏற்பட்டு ஒருவர்மண்ணில் புதைந்து பலியானார். இகுனிக் பகுதியில் உள்ள ஒரு விடுதியும் இடிந்து விழுந்ததில் சிலர் பலியானார்கள். இந்த நிலநடுக்கம் பெரு, பொலிவியா நாடுகளிலும் உணரப்பட்டது.

## கார்க் குண்டுவெடிப்பு ஈராக்கில் 18பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் கார்க் குண்டு வெடித்ததில் 18 பேர் பலியாகியுள்ளனர். ஈராக்கில் சதாம் ஹுசேனின் சொந்த ஊரான திக்ரித் நகரில் நேற்று முன்தினம் கார்க் குண்டு வெடித்தது. அதில் இரண்டு ஈராக்கியப் பொலிசார் உட்பட 18பேர் பலியானார்கள். ஈராக்கில் அமெரிக்க படைகளுக்கு ஆதரவாகச் செயற்படும் உட்கட்டமைப்புப் பாதுகாப்புப் படையைச்சேர்ந்த ஒருவரை தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றார்கள். ஈராக் தொழில் அதிபர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்.



வத்திக்கானில் போப் 16 ஆம் பெனடிக்ட் பொது மக்கள் முன்னிலையில் பிரார்த்தனை நடத்தினார்.

# சுனாமி தாக்குதலில் இருந்து தப்ப இந்தோனேஷியாவில் செயற்கை மலை

(ஜகார்த்தா)

அடுத்த முறை சுனாமிப்பேரலைத் தாக்கினால் அதிலிருந்து தப்பிப்பதற்காக செயற்கை மலைகளை இந்தோனேஷிய அரசு உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தோனே ஷியாவில்சுமாத்திராத் தீவில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பமும், அதைத்தொடர்ந்து உருவான சுனாமிப் பேரலையும் அந்த நாட்டில் இலட்சக் கணக்கான உயிர்களைப் பலி கொண்டன.

அதன் பாதிப்பு அந்த நாட்டில் மட்டும் அல்லாமல் இலங்கை, இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டது. இந்த நாடுகளிலும் பல்லாயிரம் பேர் பலியானார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் அடுத்த முறை சுனாமி தாக்கினால் அதிலிருந்து தப்பிப்பதற்காக பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் ஏஸ் மாநிலத்தில் கடலோரப்பகுதிகளில் செயற்கையாக மலைகளை உருவாக்கி, அதில் சீமெந்து பூசி புல்களை வளர்க்கத் திட்டமிட்டுள்ளனர். சுனாமி ஏற்படப்போகிறது என எச்சரிக்கை வெளியானதும் கடலோர மக்கள் மலையில் ஏறி அதன்உச்சியில் தங்கிவிடலாம். ஒரு மலை உச்சியில் ஆயிரம்பேர்வரை தங்கியிருக்கலாம். செய்கை மலைகள் தவிர, பூகம்பத்தால் பாதிக்கப்படாத மூன்று மாடிக்கட்டடங்களைக் கட்டி சுனாமி உருவாகும்போது அதில் மக்களைத் தங்கவைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தங்கள் விரும்பம் போல, செயற்கை மலைகளுக்கோ அல்லது பாதுகாப்புக் கட்டடங்களுக்கோ சென்று தங்கிக்கொள்ளலாம்.

# பெண்கள் வாகனம் ஓட அனுமதிப்பதா? சவுதிஅரேபியா அமைச்சர் எதிர்ப்பு

(ரியாத்)

பெண்கள் வாகனங்கள் ஓட விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும் யோசனைக்கு சவுதி அரேபியா உள்துறை அமைச்சர் இளவரசர் நயிப்பின் அப்துல் அஜீஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் இஸ்லாமியச் சட்டங்கள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன.



ஈராக்தலைநகரில் நடந்தஉள்நாட்டுக் கலவரத்திலிருந்து தப்பிக்க பெண் ஒருவர் கைக்குழந்தையுடன் கதறியபடி ஓடுகிறார்.

சமீபத்தில் இந்நாட்டில் முதல் முறையாக நடந்த உள்ளூராட்சித்தேர்தலில் பெண்கள் வாக்குப்போட அனுமதிக்கபடவில்லை. பொது இடங்களுக்கு பெண்கள் வருவதாக இருந்தால் பர்தா அணிந்து ஆண் உறவினர்களின் பாதுகாப்புடன் மட்டுமே வரவேண்டும் என்பது உட்பட பல கட்டுப்பாடுகள் உள்ளன.

அதேபோல் கார் போன்ற வாகனங்களைச் செலுத்தவும் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை படிப்படியாக நீக்கலாம். என்று இந்நாட்டில் பலம் மிக்க மத அமைப்பான சுரா சபையின் உறுப்பினர் முகமது அல்-சுல்பா, சமீபத்தில் ஆலோசனை தெரிவித்தார். இதற்கு சவுதிஅரேபியா உள்துறை அமைச்சரான நயிப்பின் அப்துல் அஜீஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

"வாகனங்களைப் பெண்கள் செலுத்த அனுமதிப்பது அவ்வளவு முக்கியமானதா? இந்த ஆலோசனையை நாங்கள் இரண்டாம் கட்டமாகத்தான் கருதுகிறோம். பொது நன்மையைக்கருதி இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையைநீக்குவது பற்றிப் பேசுவதை எல்லோரும் நிறுத்த வேண்டும். இதை ஒரு பிரச்சினையாக்க வேண்டாம்."என்று ரியாத்தில் அளித்த பேட்டி யில் அஜீஸ் கூறினார். இளவரசரான அஜீஸ் சவுதி அரேபியாவில் மிகவும் செல்வாக்கு மிக்கவர் என்பது குறிப்பிடத்தக்கது.

-பரந்தன் - முல்லைத்தீவு வீதியில்

# தேராவில் குளத்தடிப் பகுதியில் வீதியை அகலமாக்க வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

**பரந்தனில் இருந்து முல்லைத்தீவு செல்லும் ஏ-35 வீதியில் தேராவில் குளத்தடிப் பகுதியில் வீதியின் அகலம் வாகனப் போக்குவரத்திற்கு போதுமானதாக இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.**

மிகவும் வளைந்த நிலையில் காணப்படும் இவ் வீதி அகலம் மிகக் குறைவாக காணப்படுவதுடன் வீதியின் இரு மருங்கிலும் பாரிய பள்ளம் காணப்படுகின்றது.

அத்துடன் இவ் வீதியின் இரு மருங்கும் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியினூடாக வாகனங்கள் பயணிக்கும் போதும் வாகனங்களுக்கு வழி விடும் போதும் மிகவும் ஆபத்தான நிலையே காணப்படுகின்றது.

வீதியின் இச் சீர்கேட்டினால் இப் பகுதியில் பல வாகன விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் மரணங்களும் நிரந்தர ஊனங்களும் பாரிய காயங்களும் ஏற்பட்டுள்ளன.

"ஏ" தரத்தில் காணப்படும் இவ் வீதியை செப்பனிட்டு வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

# வாகரைப் பிரதேசத்தில் இரு புதிய பாடசாலைகள்

கல்குடா கல்வி வலயத்தில் வாகரைப் பிரதேசத்தில் இவ்வருடம் இரு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது தரம் 01 உடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களில் இயங்கி வருவதாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேசத்தில் தட்டுமுனையில் மாணிக்கர் வித்தியாலயமும், கொக்குவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஓரளவு அடிப்படைக் குறைப்பாடுகள் நிவர்த்தியாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதேவேளை இவ்விரு பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இப் பாடசாலைகள் அமைப்பதற்கான நிதியாக ஜேர்மனியில் இருக்கும் இலங்கைப் பிரஜை ஒருவரினால் சுமார் 6 மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இந் நிதியினைக் கொண்டு இவ்விரு பாடசாலைகளுக்குமான கட்டம், கிணறு, மைதானம், மலசலகூடம் போன்றன நிவர்த்தி செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே இதன் மூலம் பின் தங்கிய வாகரைப் பிரதேச மாணவர்களின் கல்வி எதிர்காலத்தில் சிறந்த முறையில் அமைவதோடு மாணவர்கள் கற்பதற்கு இனிவரும் காலங்களிலாவது சிரமமின்றி இலகுவாக அமையலாம் எனவும் தெரிவித்தார்.

# தபால் சேவை சீரின்மை மக்கள் விசனம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் பிரிவிற்குட்பட்டமூன்றாம் வாய்க்கால் (பன்னங்கண்டி) கிராமத்திற்கான தபால்சேவைகள் சீரின்மையால் இக் கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வரு கின்றனர்.

இப் பகுதிக்கு வரும் தபால்களில் பதிவுத் தபால்கள் மாத்திரமே தபால்காரரினால் வீடுகளுக்கு விநியோகிக்கப்படுவதாகவும், சாதாரண தபால்களை அங்கிருக்கும் கடைகளில் கொடுத்து விட்டுச் செல்வதாகவும், அதனால் அவை மிகவும் தாமதமாகவே கிடைப்பதாகவும், சில வேளைகளில் கிடைக்காமலேயே போவதாகவும், கூறப்படுகின்றது.


இப்பகுதிக்கான தபால் விநியோகம் சீராக நடைபெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுத்து வெகு விரைவில் இக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கமநல சேவை நிலையம் திறப்பு

(பூநகரி)

முழங்காவில் கமநல சேவை நிலையம்நாளை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அரசஅதிபரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலனும் கலந்து கொள்வர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் கமக்கார அமைப்புக் களுடன் சேர்ந்து விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி மேற்கொண்டுள்ளார் (34)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனமும், கல்வி அமைச்சும் இணைந்து நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் வதிவிடப் பயிற்சிநெறி அமர்வொன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் திருகோணமலை வள்ளுவர் தோப்பில் ஆரம்பமாகியுள்ளது.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த செல்வி. ஜெயா தம்பையா தலைமையில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பிரதிநிதிகளும், வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக இணைக்கப்பட்டு பயிற்சி நெறிகளைப் பெறவிருக்கும் மூவின 180 முன் பள்ளி ஆசிரியர்களுள் முதற்கட்டமாக 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத் தின் நிதியுதவியுடன் ஆரம்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொது நோக்கு மண்டபம் திறப்பு

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நிகொட் நிதியுதவியுடன் யோகபுரம் வளநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் புதிதாக அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத் திறப்புவிழா நிகழ்வு நேற்று முன்தினம் யோகபுரம் பகுதியில் இடம் பெற்றது.

காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் பொது நோக்கு மண்டபத்தின் பெயர்ப் பலகையினை துணுக்காய் பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து துணுக்காய் பிரதேச செயலர் நந்தகுமார் புதிதாக அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தின் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். நிகழ்வில் முன்னதாக மங்கல விளக்கினை துணுக்காய் பிரதேச காணி அலுவலர் வல்லிபுரம் துணுக்காய் காவல் துறை பணிமனை துணைப் பொறுப்பாளர் மார்த்தாண்டன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றி வைத்தார். வளநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் துணுக்காய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ரவிகரன் [illegible]னார். கருத்துரைகளை யோகபுரம் மேற்கு கிராம சேவையாளர் ஆசிரியர் க.முருகேசு துணுக்காய் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையினை துணுக்காய் பிரதேச செயலர் நந்தகுமார் துணுக்காய் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள் நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் போராளிகள் பொது மக்கள் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

## கண்டெடுப்பு

வேலுப்பிள்ளை- தவச்செல்வம் பருத்தித்துறை - (762483602V) என்பவரது அடையாள அட்டை தமிழீழ போக்குவரவுக் கழகப் பணியாளர் க.சீலன் என்பரால் பளையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் தலைமைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவல நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்

## பெற்றுக் கொள்ளவும்

(புதுக்குடியிருப்பு)

பனிக்கன் குளம் மாங்குளத்தைச் சேர்ந்த மோசஸ் றியோபேட் என்பவரது தேசிய அடையாள அட்டை புதுக்குடியிருப்பு சந்தியில் உள்ள திருமகள் அழகுச் சோலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும். (08)

## வறிய குடும்பங்களுக்கு ஈருருளிகள்

பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறிய குடும்பங்களுக்கு ஈருருளிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி பிரதேச செயலர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இப் பிரதேசத்தில் 14 வறிய மாணவர்களுக்கும், 30 கடற்றொழில் சங்க உறுப்பினர்களுக்குமென மொத்தம் 44 ஈருருளிகள் வழங்கப் பட்டுள்ளன. (34)

# மன்னாரில் திருட்டுகள் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் கடந்த சில நாட்களாக உந்துருளி திருட்டுகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்பாக நிறுத்தப்பட்ட புதிய உந்துருளி ஒன்று களவாடப்பட்டுள்ளது. மேற்படி உந்துருளியை களவு கொடுத்தவர் உந்துருளி எடுத்த கடனிற்கான தவணைப் பணத்தை கட்டுவதற்காக மன்னார் ஹற்றன் நஷனல் வங்கி சென்ற வேளையே உந்துருளி களவாடப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் அண்மைக் காலமாக அதிகளவு களவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் வறிய குடும்பங்களிற்கு வீடுகள்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்கு உலக வங்கியின் நிதியுதவியுடன் இரண்டரை கோடி ரூபா செலவில் நேப் திட்டத்தின் அனுசரணையுடன் நூறுவீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் மிகவும் வறுமை நிலையிலுள்ள கிராமங்களான தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்களிலுள்ள நிரந்தர வறிய குடும்பங்களிற்கே இவ் வீட்டுத்திட்டம் அமையவுள்ளது.

இதன்மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் நற்பயனை அடையவுள்ளனர். அடுத்த வாரமளவில் மேற்படி கிராமங்களில் புதிய வீடுகளிற்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

# இரகசியமாக வவு.வந்த டக்ளஸ் தேவானந்தா

(வவுனியா)

இரகசியமான முறையில் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியாவுக்கு வந்து சென்றுள்ளார் என்று வவுனியாப் பொலிசார் தெரிவித்தனர். இவ்வாறு அமைச்சர் ஒருவர் வருவதாக இருந்தால் வவுனியாவிலுள்ள பொலிசாரும் விஷேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்குவது நடைமுறையாக இருந்த போதும் வவுனியாவுக்கு வருவதற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னரே அமைச்சர் வவுனியாவுக்கு வருவதாகப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வந்த அவர் கடந்த சனிக்கிழமை கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளான குருமன்காட்டு ஈ.பி.டி.பியின் அலுவலகத்திற்கு சென்று பார்வையிட்டு பின்னர் கொழும்புக்கு சென்றிருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்- (21)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உணவும் வீடும் கொடுத்தால் "நான் உண்ணமாட்டேன்" என்கிறார் ஒரு பௌத்ததுறவி

## உண்ணாவிரதம் குறித்த அறிக்கையில் தென்மராட்சி வணிகர் ஒன்றியம்

(தென்மராட்சி)

**சிங்களப் பேரினவாதிகளின் அராஜகச் செயல்களைக் கண்டித்து தென்மராட்சியில் மூன்று தினங்கள் உண்ணா நோன்பும், கண்டனப் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது. இன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலும், நாளை கைதடியிலும், நாளைமறுதினம் கொடிகாமத்திலும் இந்த உண்ணாநோன்பும் பொதுக்கூட்டமும் இடம் பெறவுள்ளது.**

இது குறித்து தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

சிங்கள பேரினவாதிகளின் துரோகத்தனமான வரலாற்று நாடகம் மீண்டுமொருமுறை அரங்கேற்றப்படுகின்றது. பண்டா-செல்வா, டட்லி-செல்வா உடன்படிக்கைகளுக்கும் சிரான் அமைப்புக்கும் நேர்ந்தகதி ஒன்றுமேயில்லாத பொதுக்கட்டமைப்புக்கு ஏற்படுத்தப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு என்பது சுனாமியால் பாதிப்படைந்த வடக்கு-கிழக்கு கரையோர மக்களின் புனர்வாழ்வுக்கான வெளிநாட்டு உதவிகளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து முகாமை செய்வதற்கான வெறும் நிர்வாக அலகு மட்டுமே. இதற்கும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த முகாமைத்துவ நிர்வாக அலகுக்கே சிங்களப் பேரினவாதிகள் போடும் ஆட்டங்கள் எத்தனை? எத்தனை?

பாதிக்கப்பட்ட கரையோரத் தமிழ் மக்களுக்கு உணவும், வீடும் கொடுத்தால் நான் உண்ணமாட்டேன் என உண்ணாவிரதம் இருக்கிறார் ஒரு பௌத்த துறவி.

பேரணியும் சத்தியாக் கிரகமும் செய்கிறார்கள் ஹெல உறுமயக்கள்.

அரசாங்கத்தையே கவிழ்ப்போம் என மிரட்டுகிறது ஜே.வி.பி.

தமிழ் மக்களுக்கு எதிராக விஷம் கக்குகின்றன சிங்கள, ஆங்கில ஊடகங்கள்.

இவையெல்லாம் எதற்காக? ஒன்றுமேயில்லாத வெறும் நிர்வாக அலகான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக.

இதற்கே இவ்வளவு ஆட்டம் போடும் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பார்கள் என எண்ணுவது யார் தவறு? அது எங்கள் தவறாகும்.

எமது மக்களின் இயல்பு வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு என்ன நடந்தது?

எமது மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடிந்ததா? எமதுமீனவர் சுதந்திரமாக தொழில் செய்ய முடிந்ததா? எமது விவசாயிகள் தமதுநிலங்களில் பயிரிட முடிந்ததா?

ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டனவா? ஒஸ்லோ பிரகடனத்தின் படி காண வேண்டிய சமஷ்டிக்குஎன்ன நடந்தது?

இடைக்கால நிர்வாகசபை எங்கே போனது?

காலங்காலமாகச் சிங்கள அரசியல் வாதிகள் என்ன செய்தார்களோ அதே அவலக் கதை தான் தொடர்கிறது.

அன்பையும் கருணையையும் போதிக்க வேண்டிய பௌத்த துறவிகள் யுத்தப் பிரகடனம் செய்யும்படி மிரட்டுகிறார்கள்.

இராணுவமும் ஆயுதக் குழுக்களும் சேர்ந்து போராளிகள், பொது மக்கள், ஊடகவியலாளர்கள், தேசப்பற்றாளர்களை கொல்லுகின்றார்கள்.

திடீர் புத்தர்சிலைகள் தமிழ் மண்ணில் முளைக்கின்றன.

புத்தர் சிலையை அகற்றுவதற்கான நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய பாதுகாப்புப் படையே அதைக் காவல் காத்து வருகின்றது.

கிழக்கில் மீண்டும் பாவனைப் பொருட்களை எடுத்துச் செல்லக் கட்டுப்பாடு

மீண்டும் சுற்றிவளைப்பு,தேடுதல், கைது செய்தல், சித்திரவதை.

சிறிலங்கா இராணுவம் யுத்தத் தயாரிப்புக்களில் மும்மரமாக ஈடுபாடு.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கக்கூடாதென சிங்களப் பேரினவாதிகள் போராடும் போது அவ்வுரிமையைப் பெறுவதற்கு உரித்தான நாம் இன்னும் உறங்கிக் கிடப்பதா? அன்பான மக்களே விழித் தெழுங்கள்! என தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## -கற்றல் செயற்பாட்டிற்கு இடையூறாகவுள்ள-
## படை முகாம்களை அகற்றுவது குறித்து யாழ். அரச அதிபர் தலைமையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறாக உள்ள படை முகாம்கள் மற்றும் காவலரண்களை அகற்றுவது தொடர்பாகவும் மாணவர்களுக்கு. இலகுவான போக்குவரத்துக்களை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் கல்வித்தரத்தில் ஏற்பட்டு வரும் பின்னடைவுகளை நிறுத்த விசேட செயற்திட்டங்களை வகுத்து அமுல்படுத்துவது தொடர்பான கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றது. இக்கூட்டத்திலேயே இவ்விடயம் குறித்தும் ஆராயப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிவாஜிலிங்கம்,ந.ரவிராஜ், சுரேஸ் பிறேமச்சந்திரன், க.ஈழவேந்தன், கி.சிவநேசன் மற்றும் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் தவிர கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்விச் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

குறிப்பாக போர் அனர்த்தம் மற்றும் இடப்பெயர்வுகளினால் ஏற்பட்ட கல்வித்தர வீழ்ச்சி தொடர்ந்தும் நீடிக்கின்றது.புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியில் கூட இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. பல்வேறு தரப்புக்களாலும் கல்வி மேம்பாட்டிற்கென வழங்கப்படும் உதவிகள் முழுமையான பயன்பாட்டை அடையவில்லை என கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தரப்பில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தது.

இதையடுத்தே குடாநாட்டின் கல்வித் தரத்தை மேம்படுத்த விசேட செயற் திட்டங்களை அமுல்படுத்த இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவ்விடயங்களை கையாள்வதற்கான குழுவொன்றை நியமிக்கவும், மாதாந்த சந்திப்புக்களை நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (27)

## யாழ். கலாச்சார சீரழிவுகள் குறித்து கலாச்சார பேரவை அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் இடம் பெற்றுவரும் கலாச்சார சீரழிவுகள் குறித்து மக்களை விழிப்புடன் இருக்குமாறு கலாச்சாரப் பேரவை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

யாழ்.பிரதேசத்தினுள் அதிகளவு கலாச்சார சீரழிவுகள் நடைபெறும் இடங்களாக நெடுங்குளம், மாம்பழச்சந்தி, அரியாலை, கொழும்புத்துறை போன்ற இடங்கள் இருப்பதாக இப்பகுதி மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யாழ்.கலாச்சார பேரவை தெரிவித்துள்ளது. வீதியில் செல்லும் பெண்களை வழிமறித்து சேட்டைகள் விடும் சம்பவங்கள் அதிகரித்து இருப்பதுடன், வயது குறைந்த இளைஞர்கள் போதை மயக்கத்தில் சந்திகளில் நின்று கொண்டு ஆபாச வார்த்தைகளைக் கூறி பெண்களை அழைப்பதும் ஆபாசப்படங்களை பெண்களுக்கு காட்டுவதும், போதைப் பொருட்கள் மற்றும் புகைத்தல் ஆபாசப்படங்கள் பார்த்தல் என்பன குறித்தும் இப் பகுதிகளில் இருந்து நாள் தோறும் பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது குறித்து உடனுக்குடன் நடவடிக்கைகளைத் தாம் எடுத்து வருவதாகவும், வழி தடுமாறி வாழும் இளைஞர்களை சமூகப் பற்றுள்ள இளைஞர்களாக மாற்றும் நடவடிக்கைகளில் தாம் முனைப்புடன் ஈடுபட்டு இருப்பதாகவும் யாழ்.பிரதேச கலாச்சாரப் பேரவை தெரிவித்துள்ளது. (28)

## அகதி முகாம்களின் இடப்பற்றாக்குறையால் சுகாதார நிலைமைகள் பாதிப்படையும்!
## -வலி.தென்மேற்கு பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இடப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக காணப்படுவதாக வலிகாமம் தென் மேற்குப் பிரதேச செயலாளர் சி.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 16 இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்கள் உள்ளன. இவற்றில் வாழும் மக்களின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப இங்குள்ள மலசல கூடங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனினும் இதற்கேற்ப இவ் அகதி முகாம்களில் இடவசதி இல்லாதுள்ளதாலும் இவ் அகதி முகாம்கள் தனியார் காணிகளிலேயே உள்ளதாலும் இவற்றில் மலசல கூடங்களை புதிதாக நிர்மாணிக்க முடியாதநிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள பிரதேச செயலாளர் மோகனதாஸ்.

இதனால் இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களில் சுகாதார நிலை பாதிப்படையும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தார். (33)

## பிறமொழிப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கு சிங்களம், ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் அடிப்படை அறிவை ஏற்படுத்த நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல அரச அலுவலர்களுக்கும் இரண்டு மாத பிறமொழிப்பயிற்சிகளை வழங்கதிட்டமிடப்பட்டுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்த சுற்றுநிருபங்களையும் அரசாங்க அதிபர் கே.கணேஸ் திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். இதில் ஒவ்வொரு மொழிக்கான பாடநெறிகளும் 60 மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## முப்பது மலசல கூடம் நல்லூரில் அமைப்பு

(நல்லூர்)

யாழ். நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்களுக்காக 30 மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன் வந்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களே இம் மலசல கூட அமைப்புத்திட்டங்களுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களினது சுகாதார வசதிகளைப் பேணி அக் குடும்பங்களை தொற்றுநோய்த்தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். (33)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை; பல சிகிச்சைப் பிரிவுகளை இயக்க முடியவில்லை!
## -வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவி வரும் இடப்பற்றாக்குறை காரணமாக இங்கு பல சிகிச்சைப்பிரிவுகளை இயக்க முடியாத நிலை காணப்படுகிறது என வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இடவசதிகளை விஸ்தரிப்புச் செய்து தர பல தொண்டர் அமைப்புக்களும், சர்வதேச நாடுகளும் பல உறுதி மொழிகளை வழங்கின. ஆனால், இதில் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இதன் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பெரும் இடப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

இதனால் அத்தியாவசியமான சில சிகிச்சைப் பிரிவுகளை இயக்க முடியாதுள்ளது. சில சிகிச்சைப்பிரிவுகள். புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவை யாழ்.போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்ற போதும் அவற்றை ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது.

இதைவிட தற்போதுள்ள வைத்திய விடுதிகளிலும் இடவசதி இன்மையால் நெருக்கடி நிலைமை தோன்றியிருப்பதாகவும் இதனால் வைத்தியசாலையின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் நிர்வாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (33)

# பண்பாட்டுப் படுகொலை

“...ஏன் எப்படி எப்போது நடந்தது? என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. எனது பிஞ்சு மனதில் தொடர்ச்சி இணைந்து இசைப்பதனையும் எள்ளிநகையாடினார்கள்? ஏன் Conauto இசை Rock and Roll இனைவிட இழிவானதாகத் களிலோ நிகழ்ச்சிகளிலோ நான் ஒரு போதும் அக்கோடியன் இசைக்கருவி இசைத்ததில்லை. நான் அக்கோடியன் இசைக்கருவிகள் ஆனால் உண்மையாகவே அதனை என்னால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. நான் எதனை எனது பெற்றோரிடம் கூறுவேன்? அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட அந்த இசையையிட்டு நான் வெட்கமடைந்தேன் என்பதையா? நான் அக்கோடியன் இசைக்கருவி இசைப்பதை Santiago Timing lr உடன் அறிந்திருந்தேன். நான் அப்போது 13 வயதினையே அடைந்திருந்தேன். அவர்கள் முன்னிலையிலேயே அந்த இடத்திலேயே என் பெற்றோர் முன்னிலையிலே அழுதேன். நான் இதனைப் புரிந்து கொண்டு மீண்டும் அக்கோடியன் இசைப்பதற்கு நீண்டகாலம் இருந்தது....”

## என்னை அறிந்து கொள்வதனூடாக எனது சமூகத்தை அறிந்துகொள்ளுங்கள்

யான உறுத்தல். ஏதோ ஒன்று சரியாக இல்லை. நாங்கள் சரியாக இல்லை எனது குடும்பம் எனதுபெற்றோர். அனைத்துமே சரியாக இல்லை. ஏன்? பாடசாலையில் இஸ்பானிய மொழி பேசுவதில் என்ன தவறு? எமது தாய்மொழியைப் பேசியதற்காக நாம் ஏன் தண்டிக்கப்பட்டோம்? பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தின்போது எனது தந்தை முழுமையாக மெக்சிக்கன் மொழியில் பேசும்போது நான் ஏன் வெட்கப்பட்டேன்?எனக்கு விருப்பமான Tacos (ஒருவகை உணவு) ஐயும் பாடசாலைக்கு மதிய உணவாக எடுத்துச் செல்வதற்கு நான் ஏன் வெட்கப்பட்டேன்? ஏன் அதனை மாடிப்படிகளின் மறைவிடத்தில் வைத்து உண்ணவேண்டியிருந்தது? நான் Tacos (ஒருவகை உணவு) இனை மிகவும் விரும்பினேன். அப்படியானால் நான் ஏன் சக மாணவர்களுடன் உணவு மண்டபத்தில் வைத்து உண்ணலாம் என்பதற்காக அம்மாவிடம் “சாண்ட்விச்” ஐ மதிய உணவிற்காகக் கேட்டேன்? நான் ஏன் அக்கோடியன் வாத்தியத்தை இசைக்கவும் கொண்ஜரிண்டோ குழுவில் இணைந்து இசைக்கவும் வெட்கமடைந்தேன்? இந்த உணர்வு எங்கிருந்து வந்தது? ஏன் சிலபிள்ளைகள், பெரும்பாலான எனது சமூகத்துப் பிள்ளைகளே (chicanitos) நான் அக்கோடியன் இசைப்பதனையும் canjunto இசைக் குழுவுடன் தோன்றியது? tacosஏன் “சாண்ட் விச்” ஐ விட இழிவானதாகத் தோன்றியது? ஏன் ஆங்கிலம் இஸ்பானிய மொழியை விட உயர்வாகத் தோன்றியது? நான் ஏன் அவ்வாறெல்லாம் உணர்ந்தேன்? இந்த எண்ணம் எங்கிருந்து எனக்கு வந்தது? நான் ஏன் எனது பெற்றோரையிட்டும், எனது இசையையிட்டும், என்னையிட்டும் கூட வெட்கமடைந்தேன்? பாடசாலையில் இடம் பெற்ற போட்டி இசைப்பதைப் பற்றியும் Santiago Timing tr. y. su conjunto வுடன் இணைந்து ட்றம் இசைக்கருவி இசைப்பதனையும் எனது சக மாணவர்கள் பலரிடம் கூறுவதைக் தவிர்த்துக்கொண்டேன். பின்னர் மிக விரைவிலேயே conjunto விலிருந்து விலகிக்கொண்டேன். நான் இசைக் குழுவிலிருந்து விலகுவதைப் பற்றி எனது பெற்றோரிடம் கூறிய போது அவர்கள் காரணத்தை அறிய விரும்பினார் இணைந்து இசைப்பதனையிட்டு வெட்கமடைந்தேன் என்பதையா? எனது முடிவினைப்பற்றி மீள ஒரு தடவை சிந்திக்குமாறு அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டனர். ஆனால் அது முடிந்துபோன ஒரு விடயம் என்பதனை நான் அப்போதே

“... எமது கலைகளும் எமது பண்பாடும் இழிவானவை என்று நம்புவதற்கு மீண்டும் ஒரு போதும் நான் இட்டுச் செல்லப்படமாட்டேன். அக்கோடியன் கருவி இசைப்பதற்கு இனி ஒரு போதும் வெட்கப்படமாட்டேன் நாம் ஒரு உறுதி பூணவேண்டியுள்ளது. எமது குழந்தைகள் ஒரு கௌரவமான அமெரிக்க இந்திய சமூகமான Espanoles ஐச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்யவேண்டும். எமது மறவர் பற்றியும் எமது சன்றோர்கள் பற்றியும் எமது பிரமிட் கட்டட நிபுணர்கள் பற்றியும் எமது வானியலாளர் பற்றியும் எமது கணிதமேதைகள், கலைஞர்கள் புரட்சியாளர் பற்றியும் போர்க் காலங்களின் போதெல்லாம் இதயத்தில் இறைவனைப் பூசித்து உண்மையையும் மேன்மையையும் அன்பையும் அமைதியையும் தேடிய எமது நர்த்தனர்கள் பற்றியும்....”

“... நாங்கள் எதனையும் செய்ய முடியும் என்றும் அனைத்தையும் செய்யமுடியும் என்றும் நம்பினோம். பல தடவைகள் செய்தோம்.... இதே ஆத்மபலத்தின் ஊடாகத் தான் நான் மீண்டும் இசைக்க ஆரம்பித்தேன்....”

**26.06.2005 தொடக்கம் 02.07.2005 வரை கனடாவில் அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழ்வாரத்தை ஒட்டி இம்மொழிபெயர்ப்பு ஆக்கம் வெளியிடப்பட்டது**

*அமெரிக்கத் தொல்குடிகளில் ஒன்றைச் சேர்ந்த தலைசிறந்த இசைக்கலைஞரான juan Tejeda தனது இளமைக்காலத்து வாழ்க்கை பற்றி “பண்பாட்டுப் படுகொலை” என்ற தலைப்பில் எழுதிய வாழ்க்கைக் குறிப்பில் இருந்து பெறப்பட்ட சில வரிகளே இவை.*

*“...அவர்கள் முன்னிலையிலேயே அந்த இடத்திலேயே என் பெற்றோர் முன்னிலையிலேயே அழுதேன்...” என்ற வார்த்தைகள் தனது சுயத்தை நினைந்து இழிவாக உணர்ந்து தன்னை நினைத்தே அழுத நிலையைக் கூறுகிறது.*

*“... எமது கலைகளும் எமது பண்பாடும் இழிவானவை என்ற நம்புவதற்க இனி ஒரு போதும் இட்டுச் செல்லப்படமாட்டேன்”.., என்ற உறுதிக் கூற்று தனது பண்பாட்டையும், மொழியையும், பெற்றோரையும் தனது மண்ணிலேயே இழிவாக நினைக்கத் தூண்டிய சூழலைக் கூண்டில் நிறுத்துபவை.*

*“... இந்த ஆத்ம பலத்தின் ஊடாகத்தான் நான் மீண்டும் இசைக்க ஆரம்பித்தேன்”.., இது அந்நியமாதலை வென்று தனது பண்பாட்டினூடாகத் தன்னைத் தானே இனங்கண்டு இறுமாப்புறுகின்ற முதிர்ந்த நிலை.*

*புலம் பெயர் சூழலில் பல்வேறு உளவியல் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கும் எமது அன்புச் செல்வங்களது மனோ நிலைக்கு முற்றிலும் பொருந்துபவை juan Tajeda வின் வார்த்தைகள். எமது அடுத்த தலைமுறையினைத் தமிழ்மொழியில் நன்கு அறிவு பெற்றவர்களாக உருவாக்குவதனால் அவர்கள் தமிழ் மொழி மூலம் தமிழர்களது வாழ்வியலாம் பண்பாட்டின் உயர் விழுமியங்களை நன்கு விளங்கிக் கொள்ளவார்கள். ஏனெனில் மொழி என்ற வாகனமே அம்மொழிக்குரிய மக்களின் பண்பாட்டைக் காவிச் செல்வது. ஆதலால் தமிழ்மொழிக் கல்வியிற் கூடிய கவனம் எடுக்க வேண்டியது எமது கடமை, தமது அடையாளத்தைத் தேடவேண்டியது அவர்களது கடமை. இரண்டு கடமைகளிலும் தவறிழைப்பது வரலாற்றுக் குற்றம்.*

---

# கவிழும் நிலையிலுள்ள அரசாங்கத்தால் நாட்டை எப்படிக் கட்டியெழுப்ப முடியும்?

**- ஐ.தே.க.பா.உ. ராஜித சேனாரட்ண கேள்வி**

கவிழும் நிலையில் உள்ள ஒரு அரசால் நாட்டை எப்படிக் கட்டியெழுப்ப முடியும்? என்று ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் இன்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளதாவது,

ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1976 இல் சந்தித்தது போன்ற சூழ்நிலையை தற்போதைய மக்கள் சுதந்திரமுன்னணி அரசும் சந்தித்து வருகிறது.

வடக்குக் கிழக்கில் இரண்டு கிலோமீற்றர் கட்டமைப்பை மேற்கொள்ள அரசு எடுத்த நடவடிக்கையால் முழு நாடுமே செயலிழந்துள்ளது. நாட்டில் தற்போது எவ்வித கட்டுப்பாடுமின்றி அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துவிட்டன.

எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடக்கூடிய அரசால் நாட்டை எப்படிக் கட்டியெழுப்ப முடியும்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் யோசனை; அ.சா.நி களின் ஆதரவைக்கோரும் சனாதிபதி

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் யோசனைக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லவேண்டுமென அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களிடமும், சனாதிபதி ஆலோசகர் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடுவோமெனப் பயமுறுத்தி வரும் ஜே.வி.பியினரை இதன் மூலம் வழிப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நோர்வேத் தரப்பினரின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைத்துக் கட்சிகளையும், நிறுவனங்களையும் ஒன்றிணைத்து பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

# சுதந்திர தகவல் தொடர்பான சட்டமூலம் தற்போதைய காலகட்டத்தில் இன்றியமையாதது

**ஐ.தே.கட்சியின் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு**

(கொழும்பு)

தற்போதைய காலகட்டத்தில் சுதந்திரத்தகவல் தொடர்பான சட்டமூலம் மிகவும் இன்றியமையாதவையென ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கான தகவல் சுதந்திரமெனும் தலைப்பில் கொழும்பு, கொன்டினென்டல் உல்லாசவிடுதியில் நடைபெற்ற செயற்திட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உலக வங்கி மற்றும் கொழும்பு மாற்றுக்கொள்கைகளுக்கான மத்தியநிலையம் என்பன இணைந்து இந்தக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தன.

இங்கு மேலும் உரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்,

தகவல் சுதந்திரத்திற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமெனச்சுட்டிக்காட்டியதுடன்,

இந்தச்சட்டமூலத்தைக் கொண்டு வருவதன் மூலம் நாட்டில் சனநாயகத்தை நிறைவேற்ற முடியுமெனக் கூறினார்.

அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும்அரசாங்க நிறுவனங்கள் அனைத்திலும் தகவல் தொடர்பாடலுக்கென அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு மக்களுக்குத் தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்திய ஜீ.எல்.பீரிஸ்,

இலங்கை பிரஜை ஒவ்வொருவரும் நாடு தொடர்பான தகவலை அறிந்துகொள்வதற்கு உரிமை உடையவர்கள் எனத் தெரிவித்தார்.

# உண்ணாவிரத மேடை நோக்கிய கண்ணீர்ப்புகை பிரயோகத்திற்கு கண்டனம்

கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தேரரைச் சந்திப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று மாலை விஜயம் செய்தார்.

இதன்போது உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தம்பர அமிலவை அவர் பார்வையிட்டார். இதன்பின்னர் கருத்துரைத்த அவர் அரசாங்கம் இல்லாமல் பொதுக்கட்டமைப்பை அமைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை யெனக் குறிப்பிட்டார். இந்நிலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தேரர்இருந்த இடத்தின் மீதும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கண்டித்தார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிக்குமார் சங்க தலைவர் உவதன்னே சுமனவும் நேற்று உண்ணாவிரதம் நடைபெறும் இடத்திற்கு வருகை தந்தார்.

இதன்போது கருத்துரைத்த அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தேரருக்கு ஆபத்து நேருமானால் நாட்டில் நாளை பாரிய பிரச்சினைகள் தோன்றலாம் என அவர் எச்சரித்தார். (32)

# 06-06-2005 /12-06-2005




## 06

❖ அம்பாறை மாவட்டம் பொத்துவிலிலுள்ள உல்ல எனுமிடத்தில் கடற்கரை காணி சுவீகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொத்துவில் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

❖ கொழும்பு வெள்ளவத்தையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தமிழ் இளைஞர் பலி.

❖ மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி தேசவிரோதக் கும்பலின் துணை அமைப்பாளர் இல்லம் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டது.

❖ திருகோணமலை நகரில் வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக சர்வமதகுருமாருக்கும், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினருக்குமிடையிலான சந்திப்பு திருகோணமலையில் இடம் பெற்றது.

❖ யாழ். குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையினை தோற்றுவிப்பதில் பெருந்தடையாகவுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் அவ் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டியுள்ள சூனியப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியேற அனுமதிப்பது தொடர்பாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை- யாழ் மாவட்ட படைத்தலைமையுடன் நீண்ட பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

❖ பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் கண்டி தலதாமாளிகையின் முன்னால் எதிர்ப்பு உண்ணாவிரத போராட்டமொன்றை ஆரம்பித்தார்.



❖ விடுதலைப்புலிகளின் அம்பாறை நாவிதன்வெளி அரசியல்துறை காரியாலயம் மீது விசேட அதிரப் படையினர் தாக்குதல் நடத்தியதுடன் நாவிதன்வெளி அரசியல் துறைப் பொறுப்பாளரையும் தாக்கினர்.

## 07

❖ திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

❖ இலங்கையில் தற்பொழுது இடம் பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களுக்கு அரசாங்கமே பதில் கூறுவேண்டுமென இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு.

❖ போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்பான நடமாட்டம் என்பன சரியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது நெருக்கடிக்குள்ளாக்கப் படுமாக இருந்தால் யுத்த நிறுத்த சூழல் முழு அளவில் கேள்விக் குறியாகமாறிவிடுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேத் தூதுவர்,போர் நிறுத்தக் கண்காணிப்புகுழு பிரதித்தலைவர் ஆகியோருடன் கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இடம் பெற்ற சந்திப்பில் தெரிவிப்பு.



❖ வவுனியா மடுகந்த பகுதியில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை.

❖ கொழும்பு நகரில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிறிலங்கா குற்றப்புலனாய்வு பிரிவினரும், பொலிசாரும் இணைந்து நடத்திய தேடுதலில் தமிழ் இளைஞர் சிலர் கைது.

❖ ஊடகத் துறை அமைச்சர் பதவியிலிருந்து மங்கள சமரவீர இராஜினாமா.



## 08

❖ அம்பாறை மாவட்டம் தாண்டியடியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு.

❖ திருகோணமலை கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் இரண்டு போராளிகள் கைது.

❖ பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குகள் முன்னணியினர் சாகும் வரை உண்ணாவிரப் போராட்டத்தை கொழும்பில் நடத்தினர்.

❖ திருகோணமலை கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 56 மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது.

❖ அம்பாறை மாவட்டம் கோமாரி எனுமிடத்தில் தேசவிரோதக் குழுவினரின் தாக்குதலின்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## 09

❖ மிருசுவில் கொட்டிகை அம்மன் கோவிலுக்கருகே 45 வயதுடைய நபர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

❖ இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் கொழும்பு வருகை.



❖ மட்டக்களப்பு செங்கலடியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஈ.பி.டி.பி உறுப்பினர் உட்பட மூவர் காயம் இதேவேளை ஈ.பி.டி.பியினரும், பொலிசாரும் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலி.

❖ யுத்தத்திற்கு எதிரான முன்னணி என்ற அமைப்பு பொதுக்கட்டமைப்பை சனாதிபதி உடனடியாக புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்த வேண்டுமெனக் கூறி மஹரகமவில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

❖ புதுக்குடியிருப்பு சந்தியில் இடம் பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலி.

❖ நான்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்கதேரர்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி மாளிகையில் சந்தித்துரையாடியுள்ளார். இதன்போது மகாநாயக்கர்களின் அனுமதியின்றி பொதுக் கட்டமைப்பு கைச்சாதிடப்பட மாட்டாது எனவும் சனாதிபதி பீடாதிபதி களுக்கு எழுத்து மூலம் உறுதி வழங்கியுள்ளார்.

❖ யாழ். தென்மராட்சி மிருசுவில் பகுதியில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியிலிருந்து ஒருவரது சடலம் மீட்பு.

## 10

❖ சிறிலங்கா சனாதிபதி இம்மாதம் 15ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பு தொடர்பான நிலைப்பாட்டை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பி. கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு.

❖ உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் இரண்டு இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.



❖ சுதந்திரபுரம் படுகொலை மற்றும் லெப். கேணல் அன்பு அம்மானின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள் சுதந்திரபுரத்திலும் புதுக்குடியிருப்பிலும் அனுஷ்டிப்பு.



❖ அம்பாறை மாவட்டம் சொறிக் கல்முனையில் இளைஞர் ஒருவர் கைக் குண்டுகளுடன் விசேட அதிரடிப்படையினரால் கைது.

## 11

❖ குருநகர் பகுதியினைச் சேர்ந்த இரு இளைஞர் கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து குருநகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு.

❖ விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை அரசாங்கம் செய்து கொள்ளக் கூடாதெனக் கோரி கண்டி தலதாமாளிகைக்கு முன்னால் சாகும் வரை உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வந்த ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் தனது உண்ணாவிரதத்தை கைவிட்டார்.

❖ வவுனியா ஈ.பி.டி.பி. காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இராணுவ புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரும் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரும் கொல்லப் பட்டுள்ளதுடன், இராணுவப் புலனாய்வு பிரிவின் உறுப்பினரும் ஐந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் காயமடைந்துள்ளனர்.



❖ பொதுக்கட்டமைப்பு தொடர்பான யோசனையை வாபஸ் பெறவேண்டுமெனக் கோரி தேசிய பிக்கு முன்னணியின் தலை வர் தம்பர அமில தேரர் கோட்டை ரயில் நிலையம் முன்பாக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

❖ தமது சொந்த இடங்களில் தாம் குடியிருக்க படைகளை விலக்கக் கோரி தென்மராட்சி கிழக்கு மக்களினால் மாபெரும் வீதிமறியல் போராட்டம் நடத்தப்பட்டது.



❖

## 12

❖ மூதூர்- தோப்பூர் பள்ளிவாசலில் விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் முஸ்லிம் மதப் பெரியோர்கள் மற்றும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே கலந்துரையாடல் இடம் பெற்றது.

❖ பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் சந்தித்துரையாடியுள்ளார்.

❖ யாழ். கல்வியங்காட்டுப்பகுதியில் உள்ள பலசரக்குக்கடை ஒன்று தீயில் எரிந்து நாசம்.

❖ போருக்கு எதிரான சமாதான முன்னணியினர் திருகோணமலையில் எழுந்துள்ள புத்தர்சிலை தொடர்பான சர்ச்சை குறித்து சமாதான சந்திப்பொன்றை திருகோணமலை எகட் அமைப்பின் அலுவலகத்தில் நடத்தினர்.

# சி.சு. கட்சியின் எரிபொருளில் ஓடும் கட்சியல்ல ஜே.வி.பி

## -ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

சனாதிபதி இன்று பொதுக் கட்டமைப்பு பற்றி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பொதுசன ஐக்கிய முன்னணி நிர்வாகத்திற்கு ஏற்ற வகையிலாகும். ஜே.வி.பி. என்பது சில கட்சிகளைப் போன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எரிபொருளில் ஓடும் கட்சியல்ல. அது சுயாதீன அரசியல் சக்தி கொண்ட தனித்தன்மை வாய்ந்த ஒரு அரசியல் கட்சியாகும். அது பற்றி புரிந்து கொள்ளாது தீர்மானங்களை எடுத்தலும் அந்தத் தீர்மானங்களை தான் விரும்பும் வகையில் செயற்படுத்த முனைவதும் அரசாங்கத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக் குறித்து கருத்துக்கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசாங்கம் என்ற வகையில் செயற்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தவறிவிட்டது. தனித்து முடிவுகளை எடுத்து அவற்றை வெளியிட்டுவிட்டு அதன்பின்னர் அந்தக் கருத்தை அரசாங்கத்தின் ஏனைய கட்சிகளின் மீது பலவந்தமாகத் திணிக்க சனாதிபதியோ ஏனையவர்களோ முயற்சிப்பார்களாயின் அந்த விதமாக கூட்டமைப்பு அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியாது.

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் சனாதிபதி தனித்துத் தீர்மானங்களை எடுத்து பின்னர் அதனை ஏனைய கட்சிகளின் மீது திணிக்கும் நிலை இருந்திருக்கலாம் ஆனால் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அந்தப் பழைய பழக்கத்தை மீண்டும் கொண்டு வருவதென்பது முடியாத காரியம்.பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இணக்கப்பாட்டுடன் செயற்பட முடியாவிடில் முடிவுகளை எடுக்க முடியாவிடில், கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நிலையான எதிர்காலம் இருக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சித்தலைமை இந்த நிலையை இனிமேலும் ஏற்றுக்கொள்ள தயாரில்லாவிடில் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நிலையான எதிர்காலம் இல்லை.

சனாதிபதி தற்போது தனது பதவிக்காலத்தின் கடைசிக்கட்டத்தில் இருக்கிறார். அதனால் அவர் ஏனைய விடயங்கள் பற்றி யோசிக்காது தனது பிரச்சினையைப் பற்றி மட்டுமே யோசித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. மட்டுமல்லாது முழு நாடுமே சிக்கலில் விழ இடமுள்ளது. அந்த முடிவானது விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தங்களின் இலக்கை அடைவதற்கு ஒரு உந்துசக்தியாக அமையும்.

அனைத்து விடயங்கள் பற்றியும் யோசித்து திருத்திக்கொள்ள முயல்வாராயின் கூட்டமைப்பு அரசாங்கம் தொடரும் அவ்வாறின்றேல் அரசாங்கம் கவிழும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அநுரா பண்டாரநாயக்க நாளை சீனாவிற்கு விஜயம்

(கொழும்பு)

சுற்றலா மற்றும் உள்துறை செயற்பாடுகளை வலுப்படுத்தி இரு நாடுகளினதும் நல்லுறவுகளை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுராபண்டாரநாயக்க நாளை சீனாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி சீனாவில் சின்டாவோ நகரில் நடைபெறவுள்ள சர்வதேச சுற்றுலாக் கண்காட்சியில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கலந்து கொள்ளவுள்ளார். இலங்கை சுற்றுலா சபை உட்பட்ட முதற்தர 12 சுற்றுலாத்துறை பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த விஜயத்தின் போது சீன வர்த்தகத்துறை அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அநுரா பண்டரநாயக்க பேச்சுவார்த்தைநடத்தவுள்ளார். சீன சுற்றுலாத்துறை பிரதிநிதிகள் நிறுவனத்தின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.இதேவேளை கொழும்பில் இருந்து சீனா வரையான நேரடி விமான சேவை நாளை முதல் ஆரம்பமாகவுள்ளது.இலங்கைக்கு கூடுதலான சுற்றுலாப் பயணிகளைவரவழைப்பதே இதன் நோக்கம் எனக் கூறியுள்ளார்.


## சாவு அறிவித்தல்

### அரியரத்தினம் தர்மலட்சுமி

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் **D**-10 ,**NO** 81ஐ வசிப்பிடமாகக் கொண்ட அரியரத்தினம் தர்மலட்சுமி அவர்கள் 12.06.2005ஆம் திகதி சாவடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் , காலஞ்சென்ற சின்னத்தம்பி.செங்கமலம் தம்பதிகளின் மகளும், ஐயம்பிள்ளை, வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற யோகநாதன், உமாதேவி, சித்திராதேவி, பத்மநாதன், கமலாதேவி, லோகநாதன், ஜெகநாதன், சரோசாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், உலகநாதன், புஸ்பநாதன், நேசிலி, குலம், தேவி, ஜீவா, ராஜகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 15.06. 2005 புதன்கிழமை மாலை 4.00மணிக்கு உருத்திரபுரம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

(6267)


# தப்பியோடிய படையினரை நிரந்தரமாக விடுவிக்க மீண்டும் அரசு நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்காப் படைகளில் இருந்து தப்பித்துச் சென்றவர்களை நிரந்தரமாகப் படைகளில் இருந்து விடுவிக்க மற்றும் ஒரு சந்தர்ப்பம் நேற்று முன்தினம்முதல் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதிவரை கொழும்பு மலே வீதியிலுள்ள படைக்கான ஆட்சேர்ப்பு மையத்தில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2003 சனவரி எட்டாம் திகதி அன்று படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களாக பிரகடனப்படுத்தியவர்கள் இந்த நடவடிக்கைகளின் கீழ் நிரந்தரமாக படைகளில் இருந்து விலக்கப்படவுள்ளனர்.

சிறிலங்காப் படைகளில் இருந்து சுமார் 80 ஆயிரம் பேர்வரை தப்பிச்சென்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (32)

# மின்கட்டணத்தில் 20 வீத அதிகரிப்பு; அமைச்சரவையில் யோசனை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மின்கட்டணத்தில் 20 சதவீத அதிகரிப்பினை ஏற்படுத்தும் யோசனை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

டீசலின் விலை அதிகரித்துள்ளதால் மின் கட்டணங்கள் கட்டாயமாக அதிகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபையின் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

நாட்டில் தோன்றியிருக்கும் நெருக்கடியான நிலைமையினால் மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பான இறுதி முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டியிருப்பதாகவும், அது சம்பந்தமான யோசனைகளை மாத்திரம் மின் சாரசபை அரசாங்கத்திடம் கையளித்திருப்பதாகவும் மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பொதுக்கட்டமைப்பு மனிதாபிமான யோசனையெனில் அதை மக்களுக்கு வெளிப்படுத்த சனாதிபதி ஏன் தயங்க வேண்டும்

## -அத்துரலியே ரத்னதேரர் கேள்வி

பொதுக்கட்டமைப்பு ஒரு மனிதாபிமான யோசனை என்றால், அதனை மக்களுக்கு வெளிப்படுத்த சனாதிபதி சந்திரிகா ஏன் தயங்கவேண்டுமென ஜாதிகஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பில் என்ன இருககிறது என்பது மக்களுக்குத் தெரிவிக்கப்படாததே இன்றைய பிரச்சினைக்குப் பிரதான காரணம் என்றும் இங்கு குறிப்பிட்ட அவர் அதனை மக்களுக்கும், மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்துக்கும் கையளிப்பதற்கு மக்களுடைய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி சந்திரிகா ஏன் தயங்க வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார்.

# அரசு பதவியை இழக்கும் வாய்ப்புக்கள் கிடையாது

*–அமைச்சர் டி.எம். ஜெயரத்ன நம்பிக்கை*

தற்போதைய அரசியல் நிலைமை காரணமாக அரசாங்கம் பதவி இழக்கும் நிலை ஏற்படும் பட்சத்திலும் கூட அரசுடன் சில ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகள் மூலம் ஸ்திரத்தன்மையை அரசாங்கம் பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கம் பதவி இழக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என நான நினைக்கவில்லை. ஜே. வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்லாமல் ஏனைய கட்சிகளும் அரசாங்கத்துடன் இணையக் கூடிய நிலையிலே உள்ளன எனவும் தெரிவித்தார்.


## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

ஜொனி விளையாட்டுக்கழகமும், இராமநாதபுரம் வட்டக்கச்சி விவசாய பெருமக்களும் இணைந்து நடாத்தவிருக்கும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

**காலம்:-19.06.2005 (ஞாயிற்றுக்கிழமை)**

**இடம்:- கலைவாணி விளையாட்டுத்திடல், வட்டக்கச்சி.**

**நேரம்:-முற்பகல் 11.00 மணி**

**சிறப்பு விளையாட்டுக்கள்:-**

01. உழவு இயந்திர இழுவைப் பெட்டி கொழுவல்
02. இருவர் சேர்ந்து மாட்டுவண்டிஇழுத்தல்

**வெளிமாவட்டங்களும் பங்குபற்றலாம்.** (6258)



## அறிவித்தல்

சண்முகராசா-
சந்திரகுமாரன்,
09ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
15.06.2005

**மேற்படி முகவரியில் வதியும் ச.சந்திரகுமாரன் ஆகிய நான் இத்தால் சகலருக்கும் அறியத்தருவது; எனது தந்தையாரான ஆறுமுகம் சண்முகராசா (இங்கிலிஷ் மாஸ்ரர்) என்பவரிடமும், அவரது மனைவியான சண்முகராசா இராசலெட்சுமியிடமும் பணத்தேவையின் நிமிர்த்தம் தங்க நகைகளை அடகு நோக்கில் கொடுக்கப் பட்டிருந்தால் அவை பற்றிய முழுவிபரங் களையும் 15.06.2005 தொடக்கம் 15.09.2005 இற்கு இடையில் கீழ்வரும் முகவரியில் பதிவு செய்யவும். குறித்த காலத்தின் பின்னர் நீதிமன்றினூடாக நகைகள் யாவும் நியாய மான அடிப்படையில் வட்டியும், முதலுமாக அறவிடப்பட்டு நகைகள் மீள ஒப்படைக்கப்படும் என்பதுடன், உரியகாலத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படாதவிடத்து காலாவதியான பதிவுகள் நிராகரிக்கப்படும் என்பதை இவ் அறிவித்தல் மூலம் தெரியப்படுத்துகிறேன்.**

பதிவு செய்யும் முகவரி,
திரு.க.கோல்ரைன்,
(சட்டத்தரணி)
10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்
சண்முகராசா.சந்திரகுமாரன்.

(6168)

-காஷ்மீர் மத்திய பொலிஸ் முகாம் மீது-

# தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் கார்க்குண்டுத் தாக்குதல்; 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் பலி; 100 பேர் காயம்

(காஷ்மீர்)

காஷ்மீர் சிறிநகரில் மத்திய பொலிஸ் முகாம் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் பலியாகியுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சக்தி வாய்ந்த 40 கிலோ ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்தை ஏற்றிச் சென்ற கார் மத்திய ரிசேவ் பொலிஸ் முகாமுக்கு 50 மீற்றர் தூரத்திலுள்ள பாடசாலைக்கு அருகே வெடித்துச் சிதறியது.

இதில் அந்த மாருதிக்கார் சின்னாபின்னமாக வெடித்துச் சிதறியது. அந்தப் பகுதியில் இருந்தவர்கள் தூக்கிவீசிவிட்டனர். இதில் மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையின் மூன்று அதிகாரிகள் மற்றும் 18 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். நூறிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் அனை வரும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. குண்டு வெடித்த போது மாருதிக் காரைக் கடந்து சென்ற வானில் இருந்த மூன்று பேர் கொல்லப்பட்டனர். குண்டு வெடித்த இடத்தில் இருந்த கடைகள், வீடுகள் பலத்த சேதமடைந்தன.

தீவிரவாதிகளின் தாக்குதலால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் அந்த வழியாகச் சென்ற வாகனங்கள் மீது கல்லெறிந்தனர். இதனால் போக்குவரத்துத் தடைப்பட்டது.

பொலிசார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கூட்டத்தைக் கலைத்தனர். கார்க்குண்டு வெடித்த இடத்தை படையினர் முற்றுகையிட்டுள்ளனர். அந்தப் பகுதியில் பதற்றமும் பீதியும் நிலவுகிறது.

இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலை நடத்தியது எந்தத் தீவிரவாத இயக்கம் என்பது தெரியவில்லை. வெடிகுண்டு ஒரு டிரக்கில் இருந்து வெடித்ததாக பொலிசார் முதலில் சந்தேகப்பட்டனர். ஆனால் அந்த டிரக் அதிகமாகச் சேதமடையவில்லை. ஒரு மாருதிக் காரின் எஞ்சின் தனியாக கழன்று கருகிக் கிடந்ததைப் பார்த்த பின்பு தான் குண்டு மாருதிக் காரில் இருந்து வெடித்ததை உறுதி செய்தனர்.



குண்டுவெடிப்பில் பலியான மாணவனின் [illegible] உறவினர்கள் எடுத்துச் செல்லும் காட்சி.

## தமிழக பொலிசாரின் தொடர் கொள்ளைகள்


(மதுரை)

மதுரை நகைக்கடை ஊழியரைத் தாக்கி கொள்ளை அடித்ததாக மூன்று பொலிசார் உட்பட எட்டுப் பேர் சென்னையில் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் நடந்த கொள்ளை மற்றும் வழிப்பறி சம்பவங்களில் இந்தப் பொலிசாருக்கு தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூன்று பேரும் கோடிக் கணக்கில் பணம் சேர்த்ததாகவும் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் கொள்ளையர்கள் விவகாரம் தமிழ்நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில், இது குறித்து தீவிர விசாரணை நடத்த உதவி பொலிஸ் அதிகாரி தயாநிதி தலைமையில் ஒரு தனிப்படையும், இன்ஸ்பெக்டர் அமிர்தலிங்கம் தலைமையில் ஒரு தனிப்படையும் மதுரையில் முகாமிட்டுள்ளன.

பொலிஸ் கொள்ளையர்கள் மூன்று பேரும் பணிபுரிந்த இடங்கள், விடுமுறை எடுத்த விபரம் மற்றும் அவர்களது குடும்பப் பின்னணி குறித்தும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



ரஷ்ய அதிபர் புட்டினின் சிறப்பு அழைப்பின் பேரில் மொஸ்கோ சென்ற காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியை ரஷ்ய அமைச்சர்கள் அலெக்சாண்டர், விளாடிமிர் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்ற காட்சி.

# காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு மொஸ்கோவில் செங்கம்பள வரவேற்பு

(புதுடில்லி)

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் தனிப்பட்ட அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்று முன்தினம் நான்கு நாள் பயணமாக ரஷ்யா சென்றார். இவருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடன் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சென்றுள்ளார்.

மொஸ்கோ விமான நிலையத்தில் நேற்று முன்தினம் காலை சோனியா காந்தி தரையிறங்கினார். அப்போது கடும் மழை பெய்தது. கொட்டும் மழையில் சோனியா காந்திக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ரஷ்ய வெளியுறவுத் துறை துணை அமைச்சர் அலெக்சாண்டர், புகையிரத துணை அமைச்சர் விளாடிமிர் மற்றும் உயரதிகாரிகள் சோனியா காந்தியை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

நேற்று முன்தினம் வரலாற்று சிறப்பு மிக்க விளாடிமிர் நகரை சோனியா காந்தி சுற்றிப் பார்த்தார். பின்னர் ரஷ்ய பிரதமர் மிகில் பிராட்கோவை சந்தித்துப் பேசினார். இவர் இந்தியாவின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

இன்று பீட்டர்ஸ்பெர்க் நகரில் அதிபர் புட்டின் அளிக்கும் விருந்தில் சோனியா காந்தி கலந்து கொள்கிறார். அப்போது இரு தலைவர்களும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்துவர்.

இதன் பின்னர் தனது நான்கு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு நாளை சோனியாகாந்தி இந்தியா திரும்புகிறார்.

# லல்லு விடுத்த அழைப்பை பஸ்வான் நிராகரித்தார்

(புதுடில்லி)

பீகாரில் கூட்டணி அமைக்க லல்லுவின் கட்சி விடுத்த அழைப்பை பஸ்வான் நிராகரித்தார்.

மத்திய அமைச்சராக இருக்கும் லல்லுப் பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதா தளமும் ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தியும் கடந்த பீகார் சட்டசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டன.

இதனால் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காமல் சட்டசபை கலைக்கப்பட்டு வரும் அக்டோபர், நவம்பர் மாதத்தில் மீண்டும் தேர்தல் நடக்க இருக்கிறது.

இந்தத் தேர்தலில் பஸ்வான் விரும்பினால் அவரது லோக் ஜன சக்தி கட்சியுடன் கூட்டணி அமைக்க தயார் என்று லல்லுவின் ராஷ்டிரிய ஜனதா தளத்தை சேர்ந்த தலைவர் ஷிவானந்ததிவேரி கூறியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்து ராம் விலாஸ்பஸ்வான் டில்லியில் அளித்த பேட்டியில் கூறியதாவது, ராஷ்டிரிய ஜனதா தளத்துடனோ, பா.ஜ.வுடனோ எனது கட்சி கூட்டுச் சேராது. அதே சமயம் காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்ட்டு, இந்திய கம்யூனிஸ்ட்டு ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர கதவு திறந்தே இருக்கிறது. இந்த கட்சிகளுடன் சேர்ந்து மதசார்பற்ற கூட்டணி அமைக்கலாம்.

பீகார் சட்டசபை தேர்தலுக்கு முன் எனது கட்சியின் செயற்குழு மீண்டும் ஒருமுறை கூடி கூட்டணி பற்றி இறுதி முடிவு எடுக்கும்.

ஐக்கிய ஜனதா தளம் இரட்டை வேடம் போடுகிறது. பா.ஜ. தலைவர் அத்வானி ராஜினாமா செய்ததை அது வரவேற்றது. ராஜினாமாவை அத்வானி வாபஸ் பெற்றதும் தே.ஜ. கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதாதளம் விலகவில்லை. ஜின்னா விவகாரத்திலேயே பா.ஜ.வில் இரண்டு விதமான கருத்து உள்ளது. பா.ஜவினர் இந்துலிசம் பற்றியும் பேச முடியாது. மதசார்பின்மை பற்றியும் பேச முடியாது என்று கூறினார்.

# எல்லை கடந்துவரும் தீய சக்திகளால் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

*-இந்திய சனாதிபதி அப்துல்கலாம் எச்சரிக்கை*

எல்லை கடந்து வரும் சில தீய சக்திகள் நமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. நமதுபாதுகாப்புப் படையினர் எல்லைப் பகுதியில் இத்தகைய சக்திகளை தடுத்து நிறுத்துவதிலும், நமது ஒருமைப்பாட்டை காப்பதிலும் அரும்பணியாற்றுவதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். மாநில அரசுகளுடன் இணைந்து மத்தியரசு இத்தகைய வன்முறையை திறம்பட சமாளித்து வருகிறது என இந்திய சனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாநில ஆளுநர்கள் மாநாடு நேற்று டில்லியில் சனாதிபதி மாளிகையில் தொடங்கியது. இந்த இரண்டு நாள் மாநாட்டை சனாதிபதி அப்துல்கலாம் தொடக்கி வைத்துப் பேசினார். துணை சனாதிபதி பைரோன்சிங் செகாவத், பிரதமர் மன்மோகன்சிங், 28 மாநில ஆளுநர்கள் யூனியன் பிரதேச மத்திய ஆளுநர்கள், மத்தியமந்திரிகள் சிவராஜ் பட்டேல், ப.சிதம்பரம் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் சனாதிபதி அப்துல் கலாம் கலந்துகொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்திய அரசியல் சட்டத்தில் ஆளுநர்களுக்கு சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது. இதுமிகவும் தூய்மையான பதவி. மாநிலத்தின் வழிகாட்டியாக ஒளிவிளக்காக ஆளுநர்கள் திகழவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திராகாந்தி விமான நிலையத்தில் வெடி மருந்துகள் மீட்கப்பட்டன

(புதுடில்லி)

டில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தில் வைத்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வெடிகுண்டுகள் வெடிக்க வைக்க உதவும் 69 டெட்னனேட்டர் கருவிகள் பத்து கலோ இரசாயனப் பொருள் 15 மீற்றர் நீளமுள்ள பியூஸ் வயர் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டன.


பாதுகாப்பு மிகுந்த டில்லி விமான நிலையத்தில் இது போன்ற வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தப் பொருட்களை வாகனத்தில் கொண்டு வந்து விமான நிலையத்தில் சேர்த்த நாருல்லா என்பவரை பொலிசார் கைது செய்தனர். இவர் ராஜஸ்தான் மாநிலம் ஆழ்வார் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இவரிடம் பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

# புலிகளைப் பாதுகாக்க நிதி ஒதுக்கீடு

இந்தியாவில் புலிகள் சரணாலயங்களை கண்காணிக்க 65.80 லட்சத்தை மத்திய அமைச்சர் ஆ.ராசா ஒதுக்கீடு செய்துள்ளார். கடந்த மே 26 ஆம் திகதி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஆ.ராசா தலைமையில் மாநில புலிகள் சரணாலயங்களின் கள இயக்குநர்கள் மற்றும் வனவிலங்கு தலைமை பாதுகாப்பு அலுவலர்கள் கூட்டம் நடந்தது. பருவமழைக் காலங்களின் போது புலிகளை வேட்டையாடுவோர் தீவிரமாக செயற்படுவதால் அனைத்துப் புலிகள் சரணாலயங்களிலும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ராசா தெரிவித்தார்.

# இருபது ஓவர் கிரிக்கெட்; இங்கிலாந்து அபாரம் 100 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா தோல்வி



அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 20 ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியை 100 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து எட்டு விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் போல் கொலின்வூட், மார்கஸ்ரெஸ் கொதிக், கெவின் பீற்றர்சன் ஆகியோர் முறையே பெற்ற 46,41,34,என்ற ஓட்டங்களின் உதவியுடன் 20 ஓவர்முடிவில் எட்டுவிக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றது. அன்றூஸ்ரோஸ் 18 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் மைக்கல்வோன் ஓட்டம் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் மக்ராத் மூன்று விக்கெட்டுக்களையும், அன்றூசைமன்ஸ் இரு விக்கெட்டுக்களையும், கிளெஸ்பி, கஸ்பரோவிச் கிளார்க் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் பெற்றனர்.



அதனையடுத்து 180 ஓட்டங்கள் என்ற வெற்றி நோக்கி ஆடிய அவுஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்டவரிசை இங்கிலாந்தின் டரன்கோ, ஜெனரன்ட் ஜோன்ஸ் ஆகியோரின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது திண்டாடியது. அவ்வணி 31 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது அவ்வணியின் கிளெஸ்பி.,பிரட்லீ ஆகிய இருவரும் முறையேபெற்ற 24,15என்ற ஓட்டங்களே 79 என்ற எண்ணிக்கைக்கு இட்டுச் சென்றது. மொத்த ஓட்டங்கள் 23ஆக இருந்த நிலையில் மூன்று விக்கெட்டினை யும் 24 ஆக இருக்கும்போது மேலும் இரு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஹெய்டன் கிளார்க், பொண்டிங் ஆகிய மூவரும் ஓட்டம் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் கோ மூன்று விக்கெட்டுக்களையும், லூயிஸ் நான்கு விக்கெட்டுக்களையும் கொலிங்வூட் இரண்டுவிக்கெட்டினையும் ஹார்மிசன் ஒருவிக்கெட்டினையும், வீழ்த்தினர். 34 ஓட்டங்களையும், மூன்று பிடிகளையும் பெற்ற கெவின பிற்றர்சன் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.






நெதர்லாந்திலுள்ள எம்மன் நகரில் நடந்த இருபது வயதிற்குட்பட்டோருக்கான சர்வதேச கால்பந்துப் போட்டியில், பிரேசில் வீரர் தியகோ குயிரினோவின் கோல் முயற்சியைத் தாவிச் சென்று தடுக்கிறார் நைஜீரியா கோல்கீப்பர் அம்புரோஸ். இந்தப் போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்காததால் சமனில் முடிந்தது.

## 2006 உலக கால்பந்து இறுதிப்போட்டி ஜேர்மனி-பிரேசில் அணிகளே மோதும்



பீலே

பிரேசில் அணியின் முன்னாள் கால்பந்து நாயகன் பீலே பெர்லினில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், " 2002 இல் நடந்த உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஜேர்மனி-பிரேசில் அணிகள் மோதின. அடுத்த ஆண்டிலும் இதே அணிகள் மோதுமென எதிர் பார்க்கிறேன். சொந்த நாட்டில் போட்டியை நடத்துவதால் ஜேர்மனி கண்டிப்பாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். இந்த அணியின் ஆட்டத்தைப் பார்க்கும்போது இதற்குத் தகுதியான அணியாகத்தான் தெரிகிறது'' என்று தெரிவித்தார்.




மான்ட்ரியலில் நடந்த 'கனடா பார்முலா ஒன்' கார் ஓட்டப் போட்டியில் பின்லாந்து வீரர் கி.மி ரெய்கோனன் (நடுவில்) முதலிடம் பெற்றார். அருகில் ஜேர்மனியின் மைக்கேல் சுமாக்கர் (இரண்டாவது, இடது), பிரேசிலின் ரூபன்ஸ் பரிசெல்லோ (மூன்றாவது)

## இங்கிலாந்து சுற்றுப் பயணம் வங்க தேசத்துக்கு முதல் வெற்றி




இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் வங்கதேச அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. ஒரு நாள் பயிற்சிப் போட்டியில் வார்செஸ்டர்ஷயர் அணியை நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இங்கிலாந்து சென்றுள்ள வங்கதேச அணி நாட்வெஸ்ட் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. இதற்கு முன்னதாக உள்ளூர் கழக அணிகளுக்கு எதிராக பயிற்சிப் போட்டியில் விளையாடியது. கடந்த ஞாயிறன்று நடந்த ஒரு நாள் போட்டியில் வங்கதேசம், வார்செஸ்டர்ஷயர் அணிகள் மோதின.

வங்கதேச வீரர்கள் சிறப்பாகப் பந்து வீச வார்செஸ்டர்ஷயர் 168 ஓட்டங்களுக்குச் சுருண்டது. நஜ்முல் ஹுசேன், காலேத் மகமூத் தலா மூன்று விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய வங்கதேச அணி 24 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. வேகப்புயல் பந்து வீச்சாளரான சொகைப் அக்தர்,ரஜின் சாலே (1) விக்கெட்டை வீழ்த்தினர். இதன் பின், ஜாவித் ஓமர் (43), முகமது அஸ்ரபுல் (40)பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்றனர். 36 ஓவரில்ஆறு விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டம் எடுத்து வெற்றி பெற்றது.

## டெஸ்ட் தொடரை வெல்ல முடியாது போனமை வருத்தமளிப்பதாகவுள்ளது-இன்சமாம்



(லாகூர்)

மேற்கிந்தியத்தீவுடனான டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற முடியாதது வருத்தத்தை அளிப்பதாக இன்சமாம் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீபத்தில் மேற்கிந்தியத்தீவுக்குச் சென்று அந்த நாட்டு அணியுடன் பல்வேறு போட்டிகளில் விளையாடியது. ஒரு நாள் போட்டித் தொடரை பாகிஸ்தான் 3-0 கணக்கில் முழுமையாக வென்றது. அதன் பிறகு நடந்த டெஸ்ட் போட்டி தொடர் 1-1 கணக்கில் சமனானது.

இந்த டெஸ்ட் தொடரை வெல்ல முடியாமல் போய்விட்டதே என்று பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் தனது வருத்தத்தை வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் நேற்று முன்தினம் லாகூரில் நிருபர்களிடம் கூறியதாவது: மேற்கிந்தியத் தீவை எதிர்த்து நடந்த டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றி இருக்கவேண்டும். அப்படி வெல்ல முடியாமல் போனது பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஒரு கறுப்புப் புள்ளியாகும்.

இந்த ஆண்டு இறுதியில் இங்கிலாந்துக்கு எதிராகவும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவுக்கு எதிராகவும் போட்டிகளில் பாகிஸ்தான் விளையாட இருக்கிறது. அதில் வெற்றி பெறுவோம் என்று உறுதியாக நம்புகிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

## இந்திய-இலங்கை அணிகள் மோதும் ஏழு ஒரு நாள் போட்டி




இலங்கை-கிரிக்கெட் அணி வரும் நவம்பரில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தப் பயணம் குறித்து இலங்கை தற்காலிக கிரிக்கெட் சபைச் செயலாளர் டிரிபோன் மிராண்டோ கூறுகையில்,

''ஏப்ரலில் இலங்கை அணி இந்திய அணியுடன் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதாக இருந்தது. அந்த நேரத்தில் பாகிஸ்தான் அணி இந்தியா வந்ததால் இந்தத் தொடர் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது. அடுத்ததாக எங்கள் அணி நவம்பரில் இந்தியா செல்கிறது. இந்தப்பயணத்தின்போது ஐந்து ஒரு நாள், மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஏற்கனவே முடிவு செய்திருந்தோம். திட்டத்தில் மாறுதலாக தற்போது ஏழு ஒரு நாள் போட்டிகளில் விளையாடலாமா என யோசித்து வருகிறோம். இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு முத்தரப்பு ஒரு நாள் தொடரிலும் இந்தியாவுடன் விளையாட உள்ளோம்.இது பற்றி அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் கலந்து பேசவுள்ளேன்'' என்றார்.

## அமரர் பூஜிதா வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்து சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம்

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் சந்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

முதலாவது போட்டியில் தூயதமிழ் அணியை எதிர்த்தாடிய கிருஸ்ணபாரதி அணி வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டியில் ஞானோதய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்தாடிய இளந்தாமரை அணி வெற்றிபெற்றது.

மேற்படிப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக குமார், சுபானந், சாரங்கன் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்றைய போட்டியில் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து நிறைஞ்சன் அணியும், உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து இளந்தளிர் அணியும்மோதவுள்ளன.

இதேவேளை கால்பந்துப் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகின்றன.






ஜேர்மனியில் நடந்த டென்னிஸ் இறுதிப் போட்டியில் ரோஜர் பெரடர் வெற்றி பெற்றார். லண்டனில் நடந்த டென்னிஸ் போட்டியில் ஆன்டி ரொடிக் வெற்றி பெற்றார்.

விளையாட்டு

### சிந்தனைக்கு



எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடைபோட முடிந்தது என்றால், அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை, நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# தரம் தாழ்தல்

சிறிலங்கா அரசியலில் பொதுக்கட்டமைப்பு விவகாரம் பெரும் நெருக்கடியைத்தோற்றுவிப்பதாகியுள்ளது. ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமா? ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்படுமா? சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவாரா? பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாரா? என்பது போன்ற பல்வேறு கேள்விகள் அனைவர் முன்பும் இன்று உள்ளன.

இதேசமயம் பொதுக்கட்டமைப்பு ஒன்றைப்புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்போவதாகக்கூறிவரும் சனாதிபதி சந்திரிகா இப்பொதுக்கட்டமைப்பு இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலானது என்ற ஜே.வி. பி யின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றார். இது பொதுக்கட்டமைப்பில் என்ன உள்ளது. என்பதைப் படிக்காத முட்டாள்களின் பேச்சு எனத் தெரிவிக்கின்றார்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது போன்று பொதுக்கட்டமைப்பானது ஓர் அதிகாரப் பரவலாக்கல் விடயம் அல்ல என்பது உண்மையே. அதாவது பொதுக்கட்டமைப்பானது சுனாமி அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்கன சிபார்சுகளைச் செய்தல், முன்னுரிமைப்படுத்தல், புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டங்கள், தீர்மானங்களை எடுத்தல், வடக்கு கிழக்கில் புனர்நிர்மானப் பணிகளை ஏற்படுத்துதல் போன்றவற்றையே கொண்டதாகும்.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று பொதுக்கட்டமைப்பு என்றும் இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒன்றோ அன்றி விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் பலப்படுத்தும் ஒன்றோ அல்ல என்பது சரியானதே.

ஆனால் ஒன்று இப்பொதுக்கட்டமைப்பு குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் புரிந்து கொள்ளப்படுதல் அவசியமானதாகும். அதாவது இப்பொதுக்கட்டமைப்பானது சுனாமி அனர்த்தத்திற்கான மீள் கட்டமைப்பு தொடர்பானது மட்டுமே. இதற்கும் இனப்பிரச்சினை விவகாரத்திற்கும், அதன் தீர்வு தொடர்பான விவகாரத்திற்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்பது இதில் முதன்மையானது.

குறிப்பாகச்சொல்லப்போனால் விடுதலைப்புலிகள் அமைப்பு முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கும் -சுனாமி அனர்த்தப் பொதுக்கட்டமைப்பிற்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை. அத்தோடு பொதுக்கட்டமைப்பு விவகாரத்தினால் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டில், மாற்றம் எதுவும் இருப்பதாகவும் இல்லை.

இதேசமயம் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் அது இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கானதொரு சூழலை, புரிந்துணர்தலை ஏற்படுத்தும் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு தொடர்பான விடயம் தென்னிலங்கையில் பெரும் அரசியல் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதனால் பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கம்- புலிகள் இடையில் இறுதியான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அர்த்தம் கொள்ளுதல் முடியாது. இன்னமும் சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படவில்லை எனப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நிலைமை இவ்வாறிருக்க பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் பௌத்த பேரினவாதிகளின் எதிர்ப்பையும் அரசியல் நெருக்கடிகளையும் தவிர்க்கும் பொருட்டு சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை முற்றிலுமாகத் தரமற்றதாக்கும்வகையிலும் கருத்துரைகளை வெளியிட்டு வருகின்றார். அத்தகையதொன்றே பொதுக்கட்டமைப்பில் அமைச்சுச்செயலாளர் ஒருவரே கைச்சாத்திடுவார் என்பதாகும்.

பொதுக்கட்டமைப்பில் யார் கைச்சாத்திடுவதென்பது குறித்துப் பிறதகவல்கள் எதுவும் வெளிவராத நிலையில் ஏதோ ஒரு அமைச்சின் செயலாளர் ஒருவர் கையொப்பம் இடுதல் என்பதானது இக்கட்டமைப்பின் முதன்மை நம்பகத்தன்மையை குறைத்துவிடக் கூடியதாகும். அதாவது ஆட்சித்தலைவர்கள் கையொப்பம் இட்ட உடன்பாடுகளே கேள்விக்குள்ளாகிவிட்ட நிலையில் எவ்வாறு அமைச்சரொருவரின், செயலாளர் கையொப்பமிடும் உடன்பாடு வலுவானவையாக இருக்க முடியும்.

தமது பொறுப்பில் இருந்து கைகழுவுவதற்காக பொதுக்கட்டமைப்பை தாழ்ந்த மட்டத்திற்கு சனாதிபதி தரம் இறக்குவதானது பொதுக்கட்டமைப்பின் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கி விடக் கூடியதாகும். ஏனெனில் அதிகாரிகள் இடும் கையொப்பங்களுக்கு ஆட்சியாளர்கள்-அதிகாரத்தில் உள்ளவர்கள் பதில் அளிக்க வேண்டியில்லாமலும் போகலாம்.

# காலம் கடத்தாமல் தீர்க்கமான முடிவுடன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது அவசியம்

### –சனாதிபதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை

காலம் கடத்தாமல் தீர்க்கமான முடிவெடுத்து பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுமாறு சனாதிபதி சந்திரிகாவிற்கு ஆலோசனை தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறைபாடுகள் இருப்பின் அவற்றை பின்னர் பேசித்தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் எடுத்துக்கூறியுள்ளார். உறுதியான நிலைப்பாட்டை எடுக்காமல் காலத்தைக் கடத்திக் கொண்டே போனால் மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் எனவும் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் சுட்டிக் காட்டியுள்ளார். சந்திரிகாவின் அழைப்பின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் மாலை சனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை தெரிந்ததே.

மாலை மூன்று மணிக்கு ஆரம்பித்த இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு மணிநேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.தற்போது உருவாகியுள்ள அரசியல் நிலைமைகள் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்கட்சித் தலைவருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் நீண்ட காலத்திற்கு பின்தள்ளப்பட்டுக் கொண்டே போவது குறித்தும் சந்திரிகா கவலையை வெளியிட்டுள்ளார். அரசாங்கத்திற்குள்ளேயே ஒருபிரிவினர் தமக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பதனால் அரசைக்கொண்டு செல்லுவதிலும் நெருக்கடி தோன்றியிருப்பதையும், சந்திரிகா இங்கு சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும், ஜே.வி.பி. எதிர்ப்பதற்காக அதை கைவிடமுடியாது எனவும், அவர் ரணிலிடம் எடுத்துக் கூறியதோடு, ஜே.வி.பி. அரசிலிருந்து ஒருபோதும் வெளியேறப்போவதில்லை என்றும், அவர்கள் வெளியேறினால் அதற்கு எதிர்காலம் இல்லை என்பதை நன்கு உணர்ந்திருப் பதாகவும், இது தன்னை அச்சுறுத்தி அடிபணியவைக்கும் முயற்சியாகும் எனவும், சுட்டிக்காட்டிய சந்திரிகா இதற்கு தான் ஒருபோதும் அடிபணியப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கு தமக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் சந்திரிகா வேண்டுகோளையும் விடுத்துள்ளார். ஏற்கனவே தான் எழுத்துமூலம் வழங்கியிருக்கும் ஆலோசனைகள், நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைவாக பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருந்தால் அதற்கு நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்குமென உறுதியளித்த ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ உடன் படிக்கைக்கு அமைவாக ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனையும் அவர் நினைவு படுத்தியுள்ளார்.ஆனாலும் பொதுக்கட்டமைப்பு எந்த வகையில் அமைந்திருந்தாலும், அதனைத் தமது கட்சி குழப்பப்போவதில்லை எனவும், அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ள ரணில் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் காலம் கடத்துவது ஆரோக்கியமான செயல் அல்ல எனவும் இது நெருக்கடிகளை மேலும் மேலும், அதிகரிக்க வழிகளை உருவாக்குமெனவும் தெரிவித்துள்ளார்.காலம் கடத்துவதை விடுத்து தீர்க்கமான முடிவை எற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டு பகிரங்கப் படுத்தப்பட்டதன் பின்னர் அவற்றை ஆராய்ந்து குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்துகொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அடுத்து வரும் நாட்களில் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# சிங்களப் பேரினவாதிகளிடம் தீர்வு கிடைக்காது சர்வதேசம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்

### -யாழ்.கண்டனப் பேரணியில் ந.ரவிராஜ்

(கொழும்பு)

சிங்கள பௌத்த பேரினவாதிகள் தென்னிலங்கையில் நடத்திவரும் தமிழ் விரோதப் போராட்டங்கள், பேரினவாத அரசாங்கங்கள் எதுவும் தமிழரின் பிரச்சினைகளுக்குச்சரியான தீர்வு எதனையும் முன்வைக்கப் போதில்லை என்ற உண்மையை உணர்த்தியுள்ளது.இதனைச் சர்வதேச சமூகமும்,சமாதானஅனுசரணையாளர்களும், கவனத்தில் கொள்வது அவசியமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் தமிழ்விரோதப் போக்கினைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் போராட்டமொன்றை நடத்தியமை தெரிந்ததே. இந்த ஆர்ப் பாட்டத்தின் முடிவில் இடம்பெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோதே ரவிராஜ் இக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் தமது அரசியல் உரிமை களுக்காக எமது தலைவர் பிரபாகரன் வழியில் அணிதிரண்டு நிற்கின்றனர். அந்தவகையில் இன்று தமிழ் மக்கள் அரசியல், இராணுவ ரீதியில் பலம் பெற்றே நிற்கின்றோம். சுனாமி மனிதப் பேரவலங்களிலிருந்து எம் மக்களை மீட்பதற்காகவும், அவர்களுக்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், பொதுக்கட்டமைப்பு முன்வைக்கப்பட்டது.

இந்தப்பொதுக்கட்டமைப்பு நிரந்தர இணக்கப்பாட்டுக்கான அடித்தளத்தினை உருவாக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுனாமி அனர்த்தப் பொதுக்கட்டமைப்பினை ஓர் பூதாகரமான விடயமாக்கும் முயற்சிகளில்சிங்களப் பேரினவாதமும், பேரினவாதஎண்ணம் கொண்டவர்களும் போராட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளனர்.

இது தமிழ்மக்களுக்குப் பேரினவாதிகள் எந்தவொரு தீர்வுகளையும் முன்வைக்க மாட்டார்கள் என உணர்த்தியுள்ளது. இதன்மூலம் சர்வதேசமும், சமாதான அனுசரணையாளர்களும், ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது நாம் இத்தருணத்திலொன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எமது கோரிக்கைகளை மதியாது தமிழ் மக்களது அபிலாசைகளுக்கும், உரிமைகளுக்கும் எதிராகப் பேரினவாதிகள் தொடர்ந்தும் செயற்பட்டால் -தமிழர்கள் சுயநிர்ணய அடிப்படையில் பிரிந்து செல்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐ.தே.க.வின் போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டைப்பிரிக்கும் நடவடிக்கை

### ~சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கருத்து

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்திய போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டைப் பிரிக்கும் ஒரு நடவடிக்கையே தவிர தற்போது நிலவுகின்ற பிரச்சினைக்குத் தீர்வு அல்ல எனவும் எனவே ஒப்பந்தத்தை திருத்துவதோ அல்லது அதனை நீக்குவதோ மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையலாமெனவும் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கதெரிவித்துள்ளார். இது குறித்து அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது;

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஏற்படுத்திய போர் நிறுத்த ஒப்பந்தம் நன்மையானதோ? அல்லது தீமையானதோ? நாம் அதனைப் பாதுகாக்க வேண்டும். போர் நிறுத்த மீறல்கள் குறித்து நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவுறுத்திய போதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

அவர்களும் இது குறித்து ஒன்றும் செய்ய இயலாது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டின் ஒரு பகுதியில் பாதுகாப்பற்ற நிலை தோன்றியுள்ளது.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூவினங்களும் நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை. மக்களின் எதிர்பார்ப்பு நிரந்தரமான சமாதானம்.

கீழ்த்தரமான போர் நிறுத்த ஒப்பந்தத்தால் நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. அது நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கையாகும்.அதனைத்திருத்த அல்லது விலக்கமுடியாது. நாட்டின் பாதுகாப்பை இந்தக் கடினமான நிலையிலேயே நடத்திச்செல்ல முடிகின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு த.பு.கழக அலுவலகம் மீதான தாக்குதல்

## மனிதாபிமான செயற்பாடுகளைக் குழப்பும் செயல்

### - த.பு.கழகம் கடும் கண்டனம்

(நமது செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதாபிமான வேலைத்திட்டச் செயற்பாடுகளைக் குழப்பும் நோக்கில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடவடிக்கையை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் மட்டக்களப்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீது இனம்காணப்படாத துப்பாக்கிதாரிகள் உந்துருளியில் வந்து துப்பாக்கி, கைக்குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன்போது அலுவலக உதவியாளர்களான தனபால் என்பவரும், பிரபா என்பவரும் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் பின்னர் மூன்றாவது தடவையாக நடத்தப்பட்ட தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதலானது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டுவரும் துரித புனர்வாழ்வு கட்டுமானப்பணிகளைத் திட்டமிட்டுக் குழப்பி முடக்கி விடுகின்ற நோக்கமாகவே மேற்கொள்ளப்பட்டதாக நாம் கருதுகின்றோம் என்று இதுகுறித்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இலங்கையின் சமூக சேவைத் திணைக்களத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஒரு அரசசார்பற்ற மனிதநேய அமைப்பின்மீது இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையானது ஏனைய அரசசார்பற்ற மனிதநேய அமைப்புகளுக்கும் ஏற்பட்டுள்ள ஓர் அச்சுறுத்தலாகவே நாம் கருதுகின்றோம்.

சுயநலம் கொண்டு நயவஞ்சக நோக்குடன் இக்கொடூரமான செயலைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களது இலக்கை அடையப்போவதில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளுக்குத் தடையாக மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான மனிதநேயமற்ற செயற்பாடுகளால் மக்களின் சாபக்கேடுகளாலேயே பழிவாங்கப்படுவார்கள்.

எமது பிரதான அலுவல்கள் சில் சுனாமிக்கும் பின்னரான துரித புனர்வாழ்வுச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசித்துக் கொண்டிருந்த இவ்வேளையில் இத்தாக்குதலில் அலுவலக உதவியாளரும், அலுவலக காவலாளியும் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். அத்தோடு அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளும், ஓர் மிதிவண்டியும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

எமது மட்டக்களப்பு அலுவலகத்தின் மீது இதற்கு முன்னர் இரு தடவைகள் இனம் தெரியாதவர்களால் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக சிறிலங்காப் பொலிசார். எவ்வித விசாரணைகளையும் மேற்கொண்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாதமை எமக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. ஆகவே நடாத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக பாரபட்சமற்ற நீதியான விசாரணையினை சிறிலங்கா பொலிசார் நடாத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் சிறிலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குள் இயங்கும் எமது அலுவலகத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் 24 மணிநேர பாதுகாப்புக்களை வழங்கி அலுவலகத்தில் கடமையாற்றும் பணியாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அரச திணைக்களங்களுடனும், அமைச்சுக்களுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறுபட்ட மனிதாபிமான வேலைத்திட்டச் செயற்பாடுகளில் தோளோடுதோள்நின்று பணியாற்றிவருகின்றது. விசேடமாக சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு துரித புனர்வாழ்வு மீள்கட்டுமானப் பணிகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனவே இத்தகைய பணிகளை எதுவித பாகுபாடுமின்றி மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு எமக்குத் தேவையான பாதுகாப்பையும், மற்றும் ஏனைய உதவிகளையும் செய்து எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

## ஆட்சிக்...

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அளிக்காது என ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

சனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு விடயத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாக ஜே. வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகுமானால் பாராளுமன்றத்தை கலைப்பதா அல்லது சிறுபான்மை ஆட்சி ஒன்றை முன்கொண்டு செல்வதா? என சனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்.

எனவே அந்த நிலையிலும் சனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு முன்னெடுப்பு விடயத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி சிறுபான்மை ஆட்சி கவிழ்ப்புக்கு முயற்சிக்காது என ஜி. எல் பீரிஸ் குறிப்பிட்டார்.

## பொதுக்கட்டமைப்பை விரைவில்...

இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிபடுத்துவதற்கு பொதுக் கட்டமைப்பானது அவசியப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேபோல் பொதுகட்டமைப்பு ஒன்றை அமைப்பதன் காரணமாக இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்படும் என்பது இணைத்தலைவர்களின் கருத்தாக வெளிப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பாரிய யுத்தம் ஒன்று நடைபெறாதபோதும் இருதரப்பினரிடையே நடைபெறும் வன்முறைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மீது தாக்கங்களை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ள இணைத்தலைவர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பேணும் பொறுப்பு இருதரப்பிற்கும் இருப்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர். (32)

## பொதுக்கட்டமைப்பை விலக்கி...

பொதுக்கட்டமைப்பை பொறுத்தவரையில் மூத்த அமைச்சர்கள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை.அவருக்கு பின்னால் அனுபவம் இல்லாதவர்களே இருக்கின்றனர் என்றார்.

இந்த நிலையில் சனாதிபதிக்கு எதிராக செயற்படும் மூத்த அமைச்சர்களுடன் இணைந்து புதிய முன்னணி ஒன்றை தாம் அமைக்கப்போவதாக ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.இங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல்வீரவன்ச இன்று நள்ளிரவு அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவில் மாற்றம் இல்லை எனக்குறிப்பிட்டார்.எனவே அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை விலக்கிக்கொள்ள வேண்டும் என விமல்வீரவன்ச கேட்டுக் கொண்டார்.ரணில் விக்கிரமசிங்க எவருக்கும் தெரியாமல் பிரபாகரனுடன் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தில் ஏற்பட்ட தவறுகளைத்திருத்தவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஜே.வி.பி பாடுபட்டு அமைத்தது எனினும் இன்று சனாதிபதி அதேபோன்ற திருத்தமுடியாத தவறைச் செய்ய முயற்சிக்கிறார்.தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தனியான இராணுவம் இருப்பதை ஏற்றுக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க செய்துக்கொண்ட ஒப்பந்தம் காரணமாகவே உலகவங்கியின் தலைவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கென தனியான நிர்வாகம் இருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

கொபிஅனானும் கௌசல்யனுக்கு இரங்கல் தெரிவிக்கின்றார்.இந்த நிலையை மாற்றியமைக்கவே தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமைத்ததாகத் தெரிவித்த அவர், எதிர்வரும் 16 ஆம் திகதி காலையில் புதிய முன்னணி அமைக்கப்படும் என்றும் இதில் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளவர்களும் இணைந்து கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகிய பின்னர் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் முயற்சிகள் தொடருமானால் ஜே.வி .பி சனநாயக வழியில் நின்று அதனை எதிர்க்கும் என விமல் வீரவன்ச குறிப்பிட்டார். (32)

## பிரித்தானிய அமைச்சர் கொழும்பு வருகை

(கொழும்பு)

பிரித்தானிய அபிவிருத்தி அமைச்சர் கிறேக்தோமஸ் இன்று இலங்கைக்கு வருகை தந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடவுள்ளார்.

கொழும்பு வரும் இவர் 16ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார் என்றும் இதன்போது அறுகம்குடா, நிந்தவூர், அம்பாறை, ஹக்காவெவ காலி போன்ற சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இவர் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான விடயங்கள் குறித்து பல உயர்மட்டச் சந்திப்புக்களை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மன்னாரில்...

மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கடற்படைத்தரப்பு மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் தகவல்கள் தெரியவரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெற்று சற்று நேரத்தின் பின் இராணுத்தினர் விசேட சோதனை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர். இதன்போது சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (32)

## பொதுக்கட்டமைப்பைக் கைவிட...

தலைமையகம், துறைமுக பிரதான நுழைவாயில், மருதானை தொடருந்து நிலையம் கொழும்பு, தேசிய வைத்தியசாலை, பத்தரமுல்ல செத்சிறிபாய, இரத்மலானை தொடருந்து வேலைத்தளம், நாரஹென்பிட்டி நில அளவையாளர் திணைக்களம், கொலன்னாவை எண்ணெய்க் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் எதிரே இந்த ஆர்ப்பாட்டங்களை நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக அந்தத் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்தார்.

## பொருண்மிய மதியுரையகத்தில் சேதுசமுத்திர ஆய்வுப்பட்டறை

பொருண்மிய மதியுரையகத்தில் நேற்றுக் காலை 9-00 மணியளவில் சேது சமுத்திரக் கால்வாய்த்திட்டம் தொடர்பான ஆய்வுப்பட்டறை இடம்பெற்றது. இதில் ஆரம்ப நிகழ்வாக ஈகச்சுடரினை லண்டனைச்சேர்ந்த திருமதி. எலிசாமான் ஏற்றிவைத்தார். அடுத்து தேசியக்கொடியினை திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தைச்சேர்ந்த றஞ்சன் ஏற்றிவைத்தார். அடுத்து இரண்டு நிமிட அகவணக்கம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பொருண்மிய மதியுரையகத்தின் முன்னாள் ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார். மங்கல விளக்கேற்றியதைத்தொடர்ந்து பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

அடுத்து இலங்கைக்கான வடக்கு கிழக்கு சூழல் முகாமைத்துவம் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறைக்கான நூல் யு.என். டி.பி யும் ரெக்கும் இணைந்து பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டோரிற்கு வழங்கப்பட்டது. அடுத்த சேதுசமுத்திரத்திற்கான செயலமர்வு தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் சேது சமுத்திரக்கால்வாயினால் ஏற்படக்கூடிய சாதக பாதக நிலைமைபற்றிக் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து பேராசிரியர் சூசைஆனந்தன் சேதுசமுத்திரக்கால்வாய் தொடர்பான விளக்கத்தினைத் தந்தார். இடைவேளையைத்தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து பொருண்மிய மதியுரையகத்தின் திட்டமிடலிற்கான இணைப்பாளர் மனோகரனின் நன்றியுரையுடன் பிற்பகல் 3.00 மணியளவில் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.

## இன்று வவுனியா வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வாளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் இன்று ஆரம்பமாக இருப்பதாக வவுனியா வளாகத்தின் முதல்வர் தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று ஆரம்பமாவதுடன், பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான கற்கை நெறியும், வியாபார பீடத்தின் கற்கை நெறிகளும் ஆரம்பமாக இருக்கின்ற அதேசமயம் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான பரீட்சை யூலை மாதம் நான்காம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பரந்தன்–முல்லைத்தீவு வீதியில் உந்துருளிகள் நேருக்குநேர் மோதல்

### - ஒருவர் ஆபத்தான நிலையில்!

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் புளியம்பொக்கணைச் சந்திப்பகுதியில் உந்துருளிகள் இரண்டு நேருக்குநேர் மோதிக்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தானது நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பரந்தன் பகுதியிலிருந்து சென்ற இராமநாதன் சிவஞானம் என்பவருடைய உந்துருளியுடன் தருமபுரம் பகுதியிலிருந்து வந்த கணேஸ்காந்தன் என்பவருடைய உந்துருளி நேருக்குநேர் மோதிக்கொண்டது.

இதன்போது கணேஸ்காந்தன் என்பவர் படுகாயமடைந்து தருமபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இவருக்கு மேலதிகமான சிகிச்சை உடன்தேவைப்படுவதால் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளார் என யாழ்.போதனாவைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிரில் வந்த சிவஞானம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும் நேற்று மாலை 6.00 மணியளவில் பரந்தன் பகுதியில் கன்ரருடன் உந்துருளி மோதிக்கொண்டதில் ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

## அரசுக்கெதிராக ஐ.தே.கட்சி மாபெரும் எதிர்ப்புப் போராட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடத்த போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இந்தப் போராட்டம் எதிர்வரும் இரண்டாம் திகதி நடத்தப்படவுள்ளதாக அக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.பௌத்தமக்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது அந்த உறுதிமொழிகளை மறந்துள்ளதாகத் தெரிவிக்கும் திஸ்ஸ அத்தநாயக்க இந்த அரசாங்கத்தை பதவியிறக்கும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துவருவதாகத் தெரிவித்துள்ளார். (32)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து...

ஜே.வி.பி.யின் பேரணி பாரிய அளவில் வன்முறையை ஏற்படுத்தும் என்ற அச்சம் நிலவியது. பெரும் எண்ணிக்கையிலான சிறிலங்காப் பொலிஸ் லிப்டன் சுற்றுவட்டம்அருகே குவிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் எந்தவித வன்முறைகளும் இன்றி ஜே.வி.பி யின் கண்டனப்பேரணி முடிவடைந்தது.

## தமிழ்...

வதற்காக திருகோணமலைக்கு நேரில் வருவதற்கும் தாம் தயாராக இருப்பதாக அரசாங்க அதிபர் மூலம் தமிழ்மக்கள் பேரவையினருக்கு அறியத்தந்த சனாதிபதி சந்திரிகா தற்போதிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையில் அவசரப்பட்டு போராட்டங்களை முன்னெடுக்காமல் அமைதிபேணுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக இம்மாதம் 14ஆம் திகதிக்குள் தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என்று இருவாரங்களுக்கு முன்னர் அங்கு சென்றிருந்த அரசாங்க சார்புப் பிரதிநிதிகள் உறுதிமொழி வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து போராட்டங்களை இடைநிறுத்திவைக்க தமிழ்மக்கள் பேரவையினர் சம்மதம் தெரிவித்திருந்தனர். உத்தரவாதமளிக்கப்பட்டதுபோல உருப்படியான நடவடிக்கை எதுவும் உரிய காலக்கெடுவுக்குள் எடுக்கப்படாததால், போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய தேவை குறித்து தமிழ் மக்கள் பேரவையினர் ஆராய்ந்து வருகின்றனர்

எவ்வாறாயினும் தற்போது க.பொ.த. உயர்தரப்பரீட்சை இடம்பெற்றுவருவதால், இந்தப் பரீட்சை முடிவுறும்வரையில் பரீட்சையைக் குழப்பக்கூடிய போராட்டங்கள் எதனையும் முன்னெடுப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது